13.10.2015

தினமலர்

# இன்றைய வேளாண் செய்திகள்

## நாளை முதல் பெங்களூரில் மழை

பெங்களூரு: பெங்களூரில் நாளை முதல் மேக மூட்டம் அதிகரித்து, இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

பெங்களூரில் கடந்த சில நாட்களாக, பகல் நேரத்தில் வெப்ப நிலை, 29.4 டிகிரி செல்சியஸாக இருந்து வந்தது. நேற்று முன்தினம் பெய்த மழையினால், வெப்பநிலை, 21 டிகிரியாக குறைந்தது. அன்றிரவு, 8:00 மணி வரை பெய்த மழையின் அளவு, 7.8 மி.மீ., ஆக பதிவானது. இந்திய வானிலை ஆய்வு மையம் பெங்களூரு பொறுப்பு இயக்குனர் கீதா அக்னி ஹோத்ரி கூறியதாவது: வழக்கமாக பெங்களூரில் மழை காலம், செப்டம்பருடன் முடிவடைந்துவிடும். மீண்டும் மழை, அக்., 20ம் தேதிக்கு பின்னரே துவங்கும். அதுவரை வானிலை வறண்டே காணப்படும்.தற்போது அரபிக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னம் காரணமாகவே, தென் பகுதியில் மழை பெய்துள்ளது. அடுத்த சில நாட்களுக்கு, பெங்களூரில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.நாளை (14ம் தேதி) முதல் மேகமூட்டம் அதிகரித்து, இடியுடன் கூடிய மழை பெய்யலாம்.அக்., 20ம் தேதிக்கு பின், மழை அளவு அதிகரிக்கும். அக்., 17ம் தேதி வரை வெப்பநிலை குறைந்தபட்சம், 20 டிகிரி செல்சியஸாகவும், அதிகபட்சமாக, 29 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## திருப்பதி பிரம்மோற்சவத்திற்கு பழநியில் இருந்து 10 டன் பூக்கள்



பழநி:திருப்பதி பிரம்மோற்சவத்திற்காக, பழநி புஷ்ப கைங்கர்யா சபா மூலம், 10 டன் பூக்கள் கொண்டு செல்லப்படுகிறது. முதற்கட்டமாக நேற்று 3.5 டன் பூக்கள் கொண்டு செல்லப்பட்டது.திருப்பதி புரட்டாசி பிரம்மோற்சவ விழாவிற்காக பழநி புஷ்ப கைங்கர்யா சபா மூலம், ஆண்டுதோறும் பூக்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. நேற்று முதற்கட்டமாக 3.5 டன் பூக்கள் அனுப்பி வைக்கப்பட்டது.சபா பொருளாளர் மருதசாமி கூறுகையில்,“13 ஆண்டுகளாக திருப்பதி பிரம்மோற்சவ விழாவிற்கு பூக்களை அனுப்புகிறோம். இவ்வாண்டு இருமுறை பிரம்மோற்சவ விழா திருப்பதியில் நடக்கிறது. கடந்த செப்.,15ல் திண்டுக்கல்லிலிருந்து பூக்களை அனுப்பினோம்.தற்போது இரண்டாவது பிரம்மோற்சவ விழா அக்.,12 முதல் அக்., 20 வரை நடக்கிறது. அதற்காக துளசி, வாடாமல்லி, மரிக்கொழுந்து, செண்டுமல்லி, தாமரை, சம்பங்கி பூக்களை

நேற்று முதல் பழநியிலிருந்து அனுப்புகிறோம். மொத்தம் 10 டன் வரை அனுப்ப உள்ளோம்,” என்றார். திருப்பதிக்கு பூக்களை அனுப்ப விரும்புவோர் 94434 03026ல் தொடர்பு கொள்ளலாம்.

## மழையால் தக்காளி, அவரைக்காய் விலை உயர்வு

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் தொடர்மழையால் சென்ற மாதத்தை விட தக்காளி, அவரைக்காய் விலை உயர்ந்துள்ளது.திண்டுக்கல்லில் 500 ஏக்கரில்அவரையும், 4400 ஏக்கரில் தக்காளியும் சாகுபடியாகிறது.

இருப்பினும் வெளிமாநிலங்களில் இருந்து திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு நாள்தோறும் அவரை 300 டன், தக்காளி 1000 டன்னும் விற்பனைக்கு வருகிறது.கடந்த சில நாட்களாக அவ்வப்போது மழை பெய்வதால் உள்ளூர் வரத்து வெகுவாக குறைந்து விட்டது.இதனால் அவரை, தக்காளி விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது.

சென்ற மாதம் கிலோ ரூ.22க்கு விற்ற அவரை, நேற்றுமுன்தினம் ரூ.46க்கும், நேற்று ரூ.9 அதிகமாகி ரூ.55க்கும் விற்பனையாகிறது. இதேபோல கிலோ ரூ.13 முதல் 15க்கு விற்ற தக்காளி, இருமடங்கு உயர்ந்து நேற்று ரூ.25 க்கு விற்பனையானது.உதவி வேளாண் அலுவலர்சரஸ்வதி கூறுகையில், “சில நாட்களாக பெய்து வரும் மழை மற்றும் போக்குவரத்து செலவினங்களால் விலை அதிகரித்துள்ளது, என்றார்.

## பவள உயிரிகள் வளர்ச்சி 40 சதவீதம் அதிகரிப்பு:ஆய்வில் தகவல்

ராமநாதபுரம்:வனத்துறையினரின் நடவடிக்கையால் மன்னார் வளைகுடாவில் 10 ஆண்டுகளில் பவள உயிரிகளின் வளர்ச்சி 40 சதவீதம் அதிகரித்தது ஆய்வில் தெரியவந்துள்ளது.மன்னார் வளைகுடாவில் தனுஷ்கோடியில் இருந்து துாத்துக்குடி வரை 21 தீவுகள் உள்ளன.

இந்த தீவுகளை சுற்றிலும் பவள உயிரிகள் அதிகளவில் காணப்படுகின்றன. பவள உயிரி ஒரு முழுமையான சுண்ணாம்பு கற்களால் ஆனது. இதில் நுாலிழை (பாலிப்ஸ்) போன்ற பகுதி இருக்கும். இவை பாதிக்கப்பட்டால் பவள உயிரி இறந்துவிடும். இந்த பவள உயிரிகளை சுற்றிலும் 250 மீன்கள் உள்ளன.அதேபோல் 118 இன முட்தோலிகள் மற்றும் பாலுாட்டிகளான கடல்பசு, திமிங்கலம், அட்டை, ஆமை போன்றவை காணப்படுகின்றன. பவள உயிரிகள் அனைத்து கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்திற்கும் ஏற்ற இடமாக உள்ளது. கரியமில வாயுவின் அளவை குறைத்து சுற்றுச்சூழல் பாதிப்பை

தடுக்கிறது. தீவுகள், கடலோர பகுதிகளை மண் அரிப்பில் இருந்து பாதுகாக்கிறது.சுண்ணாம்புக்காக வெட்டி எடுத்தல், வெடி வைத்தல், தொழிற்சாலை கழிவு கடலுக்குள் கலத்தல், தடை செய்யப்பட்ட வலைகள் மூலம் மீன் பிடித்தல் போன்ற மனித செயல்பாடுகளால் பவள பாறைகள் அழிந்து வருகின்றன. இதனை பாதுகாக்க மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பக அறக்கட்டளை, வனத்துறை இணைந்து செயல்படுகின்றன. இவற்றின் நடவடிக்கையால் மனித செயல்பாடுகளின் பாதிப்பு குறைந்து பவள பாறைகளின் வளர்ச்சி அதிகரித்துள்ளது.

வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தடை செய்யப்பட்ட வலைகள் மூலம் மீன் பிடிப்பதற்கு தடை விதித்துள்ளோம். மேலும் 21 தீவுகளையும் கண்காணித்து கடல் வாழ் உயிரினங்களை பாதுகாத்து வருகிறோம். தொடர் நடவடிக்கையால் பவள உயிரிகள் வளர்ச்சி 40 சதவீதம் வரை அதிகரித்திருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது, என்றார்.

## திருச்சி மாவட்டத்தில் பலத்த மழை

திருச்சி:திருச்சி மாவட்டத்தில் பெய்த பலத்த மழை காரணமாக, பல இடங்களில் சாலைகள் சேதமடைந்ததுடன், ஏராளமான வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.திருச்சி மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு, 11:00 மணி முதல், நேற்று அதிகாலை, 3:00 மணி வரை பலத்த மழை பெய்தது. இதனால், மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளக்காடாகி உள்ளன. நுாற்றுக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள், வெள்ளத்தில் மூழ்கிஉள்ளதால், பல்வேறு பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.துறையூர் பகுதியில், காளிப்பட்டி என்ற இடத்தில் சாலை துண்டிக்கப்பட்டதால், திருச்சி- - துறையூர் வழித்தடத்திலான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அனைத்து வாகனங்களும், மாற்று பாதையில் திருப்பி விடப்பட்டுஉள்ளன.திருச்சியை அடுத்த சோமரசம்பேட்டை, தாயனுார், முத்தரச நல்லுார் உள்ளிட்ட பகுதிகளில், சில நாட்களாக,

சம்பா நெல் நடவுப்பணி நடந்து வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால், நெற்பயிர்கள், வேர் பிடிப்பதற்கு முன், மழை நீரில் அழுகி சேதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் : டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் மழை காரணமாக மேட்டூர் அணையின் நீர் வரத்து அதிகரித்துள்ளது. நீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடிலிருந்து 8 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 600 கனஅடியிலிருந்து 500 கனஅடி நீராகவும் குறைக்கப்பட்டது. அணைக்கு நீர்வரத்து, 3,793 கனஅடியிலிருந்து 4,668கனஅடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.57 அடியாகவும், நீர் இருப்பு 31.48 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

## மதுரையில் அதிகாலையில் கொட்டித்தீர்த்த மழை

மதுரை : வெப்பச்சலனம் காரணமாக மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இந்நிலையில் மதுரையில் இன்று(13-10-15) அதிகாலை 4 மணி முதல் 4.30 மணி வரை அரைமணி நேரம் மழை கொட்டித்தீர்த்தது. இதனால் வெப்பம் குறைந்து குளிர்ந்து காணப்படுகிறது.

## குடியிருப்புகளை சூழ்ந்தது வெள்ளம் கொட்டியது மழை! நிரம்பி வழியும் ஆண்டிபாளையம் குளம்



திருப்பூர்: திருப்பூர் மாவட்டம் முழுவதும், நேற்று முன்தினம் இரவு கனமழை கொட்டியது. நொய்யலில் நீர் வரத்து அதிகரித்து, ஆண்டிபாளையம் குளம் நிரம்பி, உபரி நீர் வெளியேறியது. தாழ்வான பகுதிகள், குடியிருப்புகள், கம்பெனிகளுக்குள் மழை நீர் புகுந்ததால், பொதுமக்கள் அவதிப்பட்டனர்.

திருப்பூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு, 10:00 மணியளவில், லேசாக மழை தூர ஆரம்பித்தது; நேரம் செல்லச் செல்ல, மழை வலுத்து, நள்ளிரவில் கனமழையாக கொட்டியது. ரோடுகள், குடியிருப்பு பகுதிகளில், போதிய மழைநீர் வடிகால் வசதி இல்லாததாலும், சாக்கடை கால்வாய்களில் பிளாஸ்டிக் கழிவு அடைத்திருந்ததாலும், மழைநீர் செல்ல வழியின்றி, பல இடங்களில் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்பு கள், கம்பெனிகளுக்குள் மழைநீர் புகுந்து, கடும் பாதிப்பை ஏற்படுத்தியது.

**மூழ்கிய வீடுகள்**

குமார் நகர் கிழக்கு, ஜெ.ஜி., நகர் பகுதிகளில் பெய்த மழையால், ராஜ விநாயகர் கோவில் பகுதியில் மழைநீர் பல அடி உயரத்துக்கு தேங்கியது; பூங்கா பகுதியில், 15 அடி நீளமுள்ள சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது.

மழைநீர் வடிய வழியின்றி, காமராஜர் நகரின் மூன்று வீதிகளை சூழ்ந்தது; 20க்கும் மேற்பட்ட காம்பவுண்ட் வீடுகளில், வெள்ளம் புகுந்தது; வீட்டில் இருந்த பொருட்கள் பாதிக்கப்பட்டன.

அப்பகுதியில் இருந்த பனியன் கம்பெனிகள், மோட்டார் ரீ வைண்டிங் கம்பெனி, பி.என்.,ரோட்டில் உள்ள பேன்ஸி ஸ்டோர் உள்ளிட்ட வணிக நிறுவனங்களுக்குள் மழை நீர் புகுந்து, பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள, பின்னலாடை துணிகள், மோட்டார் சாதன உபகரணங்கள், நீரில் மூழ்கின. மேட்டுப்பாளையம் மந்திரி வாய்க்கால் பாலம் அருகே, ரேஷன் கடைக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த, நான்கு "கெரசின் டிரம்' நீரில் அடித்துச் செல்லப்பட்டன. மேட்டுப்பாளையம் மாநகராட்சி பள்ளி வளாகத்தில், மூன்றடி உயரத்துக்கு மழைநீர் சூழ்ந்து, குளம் போல் காட்சியளித்தது. போயம்பாளையம், மகாலட்சுமி நகர், மகா விஷ்ணு நகர், கண்ணகி நகர் உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளும், மழைநீரால் சூழப்பட்டன. அங்கிருந்த நூற்றுக்கணக்கான வீடுகளில் கழிவு நீருடன் மழை நீர் புகுந்தது. நேற்று காலை, மாநகராட்சி நீர் உறிஞ்சும் வாகனம் மூலம், வீடுகள், கம்பெனி களில் தேங்கியிருந்த சாக்கடை கழிவு, மழைநீர் உறிஞ்சப்பட்டது.

நிரம்பியது குளம் நொய்யல் ஆற்றில் நீர் வரத்து அதிகரித்ததால், ஆண்டிபாளையம் குளம் நிரம்பி, உபரி நீர் வெளியேறியது. நீர் வெளியேறும் பகுதியில் ஏற்பட்ட அடைப்பால், அருகில் உள்ள விவசாய நிலத்தில் தண்ணீர் புகுந்தது. குளத்தின் கரை பகுதி உயர்த்தப்பட்டுள்ளதால், அப்பகுதி ரோட்டில், ஒரு கி.மீ., தூரத்துக்கு, தண்ணீர் தேங்கி, போக்குவரத்து பாதிக்கப்பட்டது; பஸ் ஸ்டாப் நிழற்குடையில், நான்கடி உயரத்துக்கு மழை நீர் சூழ்ந்தது. தேங்கிய நீரை வெளியேற்றுவதில், நெடுஞ்சாலைத்துறையினர் தாமதமாக செயல்பட்டதால், பொது மக்கள் அவதிக்குள்ளாகினர்.

**ஒரே நாளில் 87 மி.மீ.,**

திருப்பூர் மாவட்டத்தில், துவக்கத்தில் தென்மேற்கு பருவ மழை கை கொடுக்காவிட்டாலும், கடைசியில் தொடர்ந்து மழை பெய்து, சராசரியை மிஞ்சியது. வட கிழக்கு பருவ மழையோ, துவக்கமே நன்றாக உள்ளது. நேற்று முன்தினம் இரவு முழுவதும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், கன மழை பெய்தது. நேற்று முன்தினம் முதல், நேற்று காலை வரை, அவிநாசி - 35 மி.மீ., திருப்பூர் - 87; உடுமலை - 16; பல்லடம் - 35; தாராபுரம் - 35.50; காங்கயம் - 36; மூலனூர் - 32; பொங்கலூர் - 54; <உப்பாறு - 25 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்ட சராசரி மழை, 39.05 மி.மீ.,

**மக்காச்சோளத்தில் இருந்து மதிப்பு கூட்டு பொருள் தயாரிக்க விவசாயிகள் கோரிக்கை**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், மக்காச்சோளத்தில் இருந்து மதிப்பு கூட்டு பொருள் தயாரிக்கும் நிறுவனம் தொடங்க, மாவட்ட நிர்வாகத்திற்கு, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில் ஒன்றாக மக்காச்சோளம் உள்ளது. தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, அரூர் உட்பட பல்வேறு பகுதிகளில், மக்காச்சோளம் வீரிய ரகங்கள், இறவை பாசனத்தில், 7,954 ஹெக்டரிலும், நாட்டு ரகங்கள், மானாவரியில் 588 ஹெக்டரிலும், சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இறவை பாசனத்தில், சாகுபடி செய்யப்படும் மக்காச்சோளம், ஒரு ஏக்கருக்கு, 3,000 முதல் 4,000 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. மாவட்டம் முழுவதும், ஆண்டுக்கு சராசரியாக, 3 கோடியே, 11 லட்சத்து, 26 ஆயிரம் கிலோ மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால், மூன்று மாத பயிரான மக்காச்சோளத்தை, இறவை பாசனத்தில் சாகுபடி செய்யவே, தர்மபுரி விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இதில் பெருமளவு கால்நடை தீவனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. இதுகுறித்து, பாடியை சேர்ந்த விவசாயி பாலசந்திரன் கூறியதாவது: மாவட்டத்தில் மக்காச்சோளத்தை விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டுள்ளனர். இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்ட வியாபாரிகள், மக்காச்சோளத்துக்கு குறைந்த விலை நிர்ணயம் செய்து வருகின்றனர்.

மக்காச்சோள கதிரில் இருந்து, மக்காச்சோளத்தை தனியாக பிரிக்கும் செலவும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. மக்காச்சோளம் கொள்முதல் செய்யும் வியாபாரிகள், தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்து கொண்டு, குறைந்த விலை நிர்ணயம் செய்து வருகின்றனர். ஒரு கிலோ மக்காச்சோளத்திற்கு, 15 முதல், 18 ரூபாய் வரை மட்டும் விலை நிர்ணயம் செய்கின்றனர். இதனால், மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை தடுக்க, மாவட்ட நிர்வாகம், தர்மபுரி மாவட்டத்தில், மக்காச்சோளத்தில் இருந்து மதிப்பு கூட்டு பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

**மழையால் அணைத் தண்ணீர்வெளியேற்றம் :குளங்களை நிரப்ப ஏற்பாடு**

பழநி:தொடர் மழை காரணமாக வரதமாநதி அணை நீர்மட்டம் 60 அடியாக

(மொத்தம் 67அடி) உயர்ந்துள்ளது. அதன் உபகுளங்களை நிரப்ப வினாடிக்கு 200கனஅடி தண்ணீர்

வெளியேற்றப்படுகிறது. கொடைக்கானல் மலை, பழநி பகுதியில் சிலநாட்கள் கனமழை பெய்தால் வரதமாநதி அணை நிரம்பிவிடும். கடந்த முறை தொடர்ந்து ஒரு மாதம் வரை நிரம்பி வழிந்தது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக மழைபெய்து வருவதால் பாலசமுத்திரம் செம்மாட்டுபாறைக்குளம் நிரம்பி, உபரிநீர் ரோட்டில் ஓடுகிறது. இதனால் பாலசமுத்திரம்- கோடைபத்து பகுதிக்கு செல்ல விவசாயிகள் சிரமப்படுகின்றனர். பழநி அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதில் பாலாறு-பொருந்தலாறு அணைக்கு வினாடிக்கு 80 கனஅடியும், நீர்மட்டம் 30அடி(மொத்தம் 65அடி) உள்ளது. குதிரையாறு அணைக்கு 36 கனஅடியும் நீர்மட்டம் 40அடி(மொத்தம் 80அடி) உள்ளது. அதிகபட்சமாக வரமாநதிஅணைக்கு வினாடிக்கு 200கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. இதனால் நீர்மட்டம் 60 அடியாக உயர்ந்து உள்ளதால் தற்போது வரும் தண்ணீரை அப்படியே பாசன குளங்களுக்காக வெளியேற்றப்படுகிறது.

## தேனி மாவட்டத்தில் பரவலாக மழை; அணைகளின் நீர்மட்டம் உயருகிறது

தேனி : தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பெய்த மழை நிலவரம் (மி.மீ.,); ஆண்டிபட்டி 8.6, போடி 4.4, கூடலூர் 2, மஞ்சளாறு 30, பெரியகுளம் 1.5, சோத்துப்பாறை 17, உத்தமபாளையம் 2.6, வைகை அணை 7, வீரபாண்டி 4.

இந்த மழையால் அணைகளுக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளது. வைகை அணை நீர் மட்டம் 47.90 அடியாகவும், நீர் வரத்து அணைக்கு விநாடிக்கு 361 கனஅடியாகவும், வெளியேற்றம் 60 கனஅடியாகவும் இருந்தது. பெரியாறு அணை நீர் மட்டம் 117.40 அடியாகவும், நீர் வரத்து 516 கனஅடியாகவும், வெளியேற்றம் 511 அடியாகவும் இருந்தது. மஞ்சளாறு அணை நீர் மட்டம் 56.80 அடியாகவும், நீர் வரத்து 196 கனஅடியாகவும், வெளியேற்றம் 196 கனஅடியாகவும் இருந்தது. சோத்துப்பாறை அணை நீர் மட்டம் 98.40 அடியாகவும், நீர் வரத்து

விநாடிக்கு 20 கனஅடியாகவும், வெளியேற்றம் 3 கனஅடியாகவும் இருந்தது. சண்முகாநதி அணை நீர் மட்டம் 28 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்தும் இல்லை. வெளியேற்றமும் இல்லை.

## விவசாயிகளுக்கு மாணவிகள் விளக்கம்

போடி : போடி அருகே கூழையனூரில், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இளங்கலை 4ம் ஆண்டு மாணவிகள் கிராமப்புற தோட்டக்கலை அனுபவ திட்டத்தின் கீழ், சொட்டுநீர் பாசனத்தில் ஊடுபயிராக தக்காளி, கொத்தவரங்காய் மற்றும் மிளகாய் நாற்றுகளை பயிரிடும் முறைகள், குறைந்த தண்ணீர் மூலம் விவசாயம் செய்வதன் மூலம் அதிகமாக கிடைக்கும் வருமானம் குறித்தும் விவசாயிகள் ராஜீவ் காந்தி, முருகன், மணிகண்டன் ஆகியோருக்கு விளக்கினர். மேலும், திசு வாழை பயிரிடும் முறை, மிளகாய் தோட்டத்தில் சாறு உறிஞ்சும் பூச்சியை கட்டுப்படுத்த மஞ்சள் பொறி கவர்ச்சி அட்டையை ஏக்கருக்கு 10 என்ற அளவில் பயன்படுத்துவது ஆகியவை குறித்தும் விளக்கினர்.

## விவசாய கண்காட்சி

போடி : போடி அருகே ராசிங்காபுரத்தில் பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இளங்கலை 4 ம் ஆண்டு மாணவிகள் சார்பில் விவசாய கண்காட்சி தோட்ட கலைக் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) பாலமோகன் தலைமையில் நடந்தது. போடி தோட்டக்கலை உதவி இயக்குநர் செந்தில்குமார், அலுவலர்கள் ரவி, ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். கண்காட்சியில் மாணவிகள் உருவாக்கிய விவசாய மண் மாதிரி எடுத்தல், சொட்டுநீர் பாசனம், காளான் வளர்ப்பு குறித்து ஏராளமான விவசாயிகள் அறிந்து கொண்டனர்

## உர விற்பனைக்கு தடை; கலெக்டர் நடவடிக்கை

விருதுநகர் : ""மாவட்டத்தில் உரிய ஆவணம் பராமரிக்கப்படாமல் வைக்கப்பட்ட 19.697 மெட்ரிக் டன் அளவு ரூ.3,54,673 மதிப்பு உரம் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது,"என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை:செப்.,25ல் நடந்த மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தனியார் உர விற்பனை நிலையங்களில் உரவிற்பனை குறித்து விவசாயிகள் புகார் எழுப்பினர். இதையடுத்து மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தலைமையில் மாவட்ட உர கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு ராஜபாளையம், ஸ்ரீவி., மற்றும் வத்திராயிருப்பு தாலுகாக்களில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டது. வேளாண் துணை இயக்குனர்கள்(மாநில, மத்திய திட்டம்), வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) மேற்பார்வையில் வேளாண் உதவி இயக்குனர்கள் மற்றும் உர ஆய்வாளர்கள் அடங்கிய குழுவினர் ஆய்வு செய்தனர்.

மாதிரிகள் சேகரிப்பு

22 உர விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு 9 உர மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அதன் தரமறிய உர பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. வேம்பு கலந்த யூரியாவில் வேம்பு எண்ணெய் அளவு குறித்து அறிய ஐந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனை நிலையத்திற்கு ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.உரிய ஆவணங்கள் பராமரிக்கப்படாமல் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 19.697 மெட்ரிக் டன் அளவு 16 வகையான உரங்களுக்கு விற்பனை தடை செய்யப்பட்டு, அதன் விற்பனையாளர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

சட்ட நடவடிக்கை

இந்த உரத்தின் மொத்த மதிப்பு ரூ.3,54,673. உரக்கட்டுப்பாடு ஆணை 1985 வழிகாட்டுதல்படி விற்பனையாளர்கள் உரம் விற்பனை செய்ய

வேண்டும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் தங்களுக்கு தேவையான இடுபொருட்களை வேளாண் அலுவலர்களின் பரிந்துரை பெற்று, உரிய ரசீதுடன் உர விற்பனை நிலையங்களில் பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**உள் மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தின் உள் மாவட்டங்கள், புதுச்சேரியில் ஆங்காங்கே செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் ஏற்பட்ட வெப்பச் சலனத்தால், தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. இதனால், முக்கிய அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. தஞ்சாவூரில் 140 மி.மீ மழை: கடந்த 24 மணி நேரத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வெண்பாவூரிலும், தஞ்சாவூரிலும் 140 மி.மீ. அதிகபட்சமாக மழை பதிவானது. இதற்கு அடுத்தபடியாக, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சத்திரப்பட்டி, மதுரை மாவட்டத்தில் சோழவந்தானில் 130 மி.மீ. மழையும், திருச்சி மாவட்டத்தில் உள்ள துறையூரில் 120 மி.மீ. மழையும் பதிவானது. பிற பகுதிகளில் பெய்த மழை அளவு: நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மங்களாபுரம்-110 மி.மீ. , சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலை- 100 மி.மீ. , ஈரோடு மாவட்டத்தில் உள்ள கோபிசெட்டிப்பாளையம், சேலம் மாவட்டத்தில் உள்ள வாழப்பாடி, திருச்சி மாவட்டத்தில் உள்ள மேல் அணைக்கட்டு, திருப்பூர் ஆகியவற்றில் 90 மி.மீ., அரியலூர் மாவட்டத்தில் செந்துறை- 80 மி.மீ., ஒசூர், சேலம், மதுரை மாவட்டத்தில் உள்ள பேரையூர், தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள

திருக்கோவிலூர் உள்ளிட்ட இடங்களில் 70 மி.மீ. மழை பதிவானது.

இன்று பலத்த மழை: தமிழகத்தின் உள் மாவட்டங்கள், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமையும் ஆங்காங்கே இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. மழை தீவிரம் அடைந்துள்ளதால், மேற்கு மலைத் தொடரை ஒட்டியுள்ள மாவட்டங்களில் அடுத்து வரும் நாள்களில் பலத்த மழையை எதிர்பார்க்கலாம்.சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**டெல்டா பாசனம்: நீரின் அளவு குறைப்பு**

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்குத் திறந்து விடப்படும் நீரின் அளவு 8,000 கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வெப்பச் சலனம் காரணமாகப் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வரை 10 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டு வந்தது. இதனிடையே, டெல்டா பாசனத்துக்கு திறந்து விடப்படும் நீரின் அளவு திங்கள்கிழமை காலை 8 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

கிழக்கு - மேற்குக் கால்வாய்ப் பாசனத்துக்குத் திறந்து விடப்படும் நீரின் அளவும் 750 கன அடியில் இருந்து 600 கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.தற்போது மேட்டூர் அணைக்கு 3,793 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர் மட்டம் 69.02 அடியாக உள்ளது. நீர் இருப்பு 31.86 டி.எம்.சி.

**புதுவை, கடலூரில் பலத்த மழை**

புதுச்சேரியில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பலத்த மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.அரபிக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக கர்நாடகம், கேரளம், தெலங்கானா மற்றும் தமிழகத்தின் வட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. மீண்டும் இரு நாள்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே கன மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் புதுச்சேரியில் கனமழை பெய்தது. இதனால் சாலைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. காலை வரை பெய்த மழை காரணமாக பள்ளி, அலுவலகங்களுக்கு செல்வோர் பெரிதும் சிரமத்திற்குள்ளாயினர்.கடலூரில்...: கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவிலும், திங்கள்கிழமை அதிகாலையும் பரவலாக மழை பெய்தது. கடலூரில் இடியுடன் கூடிய மழை பெய்தபோது மின்னல் தாக்கியதில் புதுப்பாளையத்தில் மின்மாற்றி பழுதடைந்தது.

## முடிவுக்கு வந்தது மீத்தேன் பிரச்னை!

காவிரிப் படுகையில் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்துக்கு அனுமதி கிடையாது என்று தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. இதன்மூலம், இதுநாள்வரை போராடிய பல்வேறு விவசாய அமைப்புகள் மகிழ்ச்சியுறும். தமிழ் ஆதரவு அமைப்புகளும், சுற்றுச்சூழல் அமைப்புகளும், சில எதிர்க்கட்சிகளும் இதற்கான போராட்டங்களை காவிரி டெல்டா பகுதியில் தொடர்ந்து நடத்திவந்தன. அவர்களும் இந்த மகிழ்ச்சியில் பங்குபெறுவர். ÷பல தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர் தலைமையில்

ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, இத்திட்டம் குறித்து அறிக்கை அளிக்கப் பணிக்கப்பட்டது. இக்குழு அளித்த அறிக்கையின்படி, தற்போது இந்த அரசாணை வெளியாகியுள்ளது. ÷மீத்தேன் திட்டத்துக்கு கடந்த திமுக ஆட்சியில்தான் அனுமதி கொடுக்கப்பட்டது என்றாலும்கூட, இந்த விவகாரத்தை அரசியலாக்க வேண்டியது அவசியமில்லை. மத்திய அரசின் சார்பில் முன்வைக்கப்படும் திட்டத்தைப் பற்றி அதிகாரிகள் தரும் தவறான வழிகாட்டுதல்கூட இத்தகைய மக்களுக்கு எதிரான திட்டங்களை ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் ஏற்பதற்கு காரணமாகி விடுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

÷திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி பகுதியில் 661 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் நிலக்கரிப் படுகை உள்ளது. இதனடியில் கிடக்கும் மீத்தேன் வாயுவை, துளையிட்டு எடுப்பதன் மூலம் மத்திய அரசுக்கு மீத்தேன் வாயு தொடர்பான தொழில்கள் மற்றும் அதிக வருவாய் கிடைக்கும் என்பது உண்மையே என்றாலும், இந்த மீத்தேன் வாயுவை எடுக்கும்போது பாதிக்கப்படக்கூடிய நிலம், காலம்காலமாக நெல் சாகுபடி செய்யப்பட்டு வரும் பரப்பு என்பதுதான் விவசாய அமைப்புகளின் எதிர்ப்புக்கு முதன்மைக் காரணம். ÷இத்திட்டத்தை சோதனை அடிப்படையில் மேற்கொள்ள அனுமதி பெற்றிருந்த கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் காவிரி டெல்டா பகுதியில் ஆழ்துளையிட முயன்ற ஒவ்வொரு சம்பவமும் பெருந்திரள் முற்றுகைப் போராட்டத்தாலும், அதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளின் சமரசப் பேச்சாலும் தடுத்து நிறுத்தப்பட்டன. அந்த நிறுவனம், இந்தச் சோதனையை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய காலக்கெடுவும்கூட முடிந்துவிட்டது. ÷மீத்தேன் வாயு எடுப்புக்கான திட்டத்துக்கு இந்த நிறுவனம் அளித்த சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த மதிப்பீட்டில், இந்த வாயு எடுக்கப்படும் நேரத்தில் வெளியேற்றப்படும் நிலத்தடி நீரின் ஐசோடோப் கூறுகள், இந்தப் படுகையில் நிலத்தடியில் காணப்படும் நிலக்கரி படிவம் குறித்த தரவுகள், மீத்தேன் வாயு கசிவால்

ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து எந்தத் தரவுகளையும் மாநில அரசுக்கு அளிக்கவில்லை.

÷மீத்தேன் வாயு எடுக்கப்படும் நடைமுறை ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நடப்பதாலும், பாதுகாப்பான குழாய்கள் மூலம் மீத்தேன் வாயு நிலத்தின் மீது கொண்டு செல்லப்படும் என்பதாலும் விவசாய நிலங்கள் பாதிக்காது என்று மட்டுமே இந்த நிறுவனம் வலியுறுத்தி வந்தது. சமரசப் பேச்சு கூட்டங்களில் எண்ணெய் நிறுவன அதிகாரிகளும் இதே கருத்தை வலியுறுத்தினர்.

÷ஆனால், மீத்தேன் வாயு அதிகளவு எடுக்கப்படும்போது, மண்அடுக்குகளில் இடைவெளி ஏற்படுவதால் நிகழும் நிலத்தட்டு அழுந்துதல் அல்லது நகர்ந்து போகக்கூடிய வாய்ப்புகள் குறித்தோ, குழாய்கள் வெடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தோ யாரும் பேசவில்லை. ஆனால், தமிழக அரசின் வல்லுநர் குழு இந்த விபத்துகளையும், ஆழ்துளைக் கிணறுகள் மூடப்படாமல் விடப்படும் என்பதையும் இந்த பரிந்துரைகளில் சுட்டிக்காட்டியுள்ளது.

÷நிலத்தட்டு நகர்வு அல்லது அழுந்துதல் என்பது காவிரி டெல்டா பகுதிக்குப் பேரழிவை ஏற்படுத்தும். நிலத்தட்டு மாற்றங்களால் கடல்நீர் திடீரென பின்வாங்கியதால் வெளிப்பட்டவைதான் இன்றைய அரியலூர், ஜெயங்கொண்டம் பகுதிகள். இந்தத் திடீர் மாற்றத்தால் வெளியேற முடியாத கடல்சார் உயிரினங்களின் படிவுகள்தான் இங்கே சுண்ணாம்புக் கற்களாக, கற்படிவுகளாக உள்ளன. தமிழகத்தின் ஒரு பகுதிக்கு ஏற்பட்ட பாதிப்பை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதே நிலை காவிரி படுகைக்கும் ஏற்பட்டு விடக் கூடாது.

÷நிலத்தின் அடியிலிருந்து மீத்தேன் வாயுவும், நீரும் பெருமளவு வெளியேற்றப்படும்போது, கடலின் நீரோட்டம் உள்புகுந்து நிலத்தடி நீர் முழுதும் கரிப்பாக மாறும் ஆபத்தும் அதிகம். காவிரிப் படுகையில் கிணற்றுப் பாசனம் மூலம் சாகுபடி செய்யும் விளைநிலத்தின் விளைச்சலின் தரம் மாறுபடும். இவையாவும் ஒரே நாளில் அல்லது ஒரே

சாகுபடியில் தெரிந்துவிடாது. அவை வெளிப்படும்போது, பாதிப்புகளைக் கட்டுப்படுத்தும் அனைத்து வாய்ப்புகளையும் நாம் இழந்துவிட்டிருப்போம்.

÷காவிரி விவசாயிகளின் இந்த முன்னெச்சரிக்கை உணர்வு, அவர்களது அன்றாட விவசாயத்திலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கர்நாடகத்தின் பிடிவாதத்தால் நேர்ந்துள்ள காவிரி நீர் பற்றாக்குறை நிரந்தரமாகியுள்ள இன்றைய சூழலில், நீர் மேலாண்மை மற்றும் நெல் தவிர்த்த மாற்றுப் பயிர் முயற்சிகளில் ஈடுபடுவதிலும் காணப்பட வேண்டும்.

÷தமிழகத்தின் நெல் களஞ்சியம் தஞ்சை என்கின்ற நிலைமை மாறாது நீடிக்கும் என்பது உறுதியில்லை. கிடைக்கும் நீரை வீண்செய்யாமல் முழுமையாகப் பயன்படுத்துதல், கிடைக்கும் நீர் அளவுக்கு ஏற்ற பயிருக்கு கொஞ்சம் கொஞ்சமாக பரிசோதனை அடிப்படையில் மாறுவது ஆகியன இன்றைய காலத்தின் கட்டாயம்.

÷தொடக்க நிலையிலேயே மீத்தேன் வாயுத் திட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டிருப்பது நன்மையே. தமிழக அரசின் இந்த முடிவு பாராட்டுக்குரியது.

## மரபுசாரா எரிசக்தி: தேவையும் அவசியமும்

ஜெர்மனியின் பான் நகரில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் குறித்த ஐ.நா. மாநாட்டில், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான தனது செயல்திட்டத்தை, இந்தியா சமர்ப்பித்துள்ளது. இதில் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியின், மாசு வெளியேற்ற அளவு 2030-க்குள் 33 முதல் 35 சதவீதம் வரை குறைக்கப்படும் என இலக்கு நிர்ணயித்துள்ளது. மாசு இல்லாத எரிசக்தியின் அளவை 40% உயர்த்துவது எனவும், இந்த இலக்கை அடைய வளர்ந்த நாடுகள் உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் 175 கிகா வாட் (1 கிகா வாட்=1000 மெகா வாட்) அளவுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை

உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அந்தச் செயல்திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் மக்கள் தங்களின் வசதி வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்வதால் மின் சாதனப் பொருள்களின் தேவையும் அதிகரித்து வருகின்றன. இதனால் மின்சாரத்தின் தேவையும், எரிபொருளின் தேவையும் அதிகரித்து வருகிறது. மின் தேவையைப் நிறைவு செய்வதில் அனல் மின் உற்பத்தி முறையே முதலிடம் வகிக்கிறது. அனல் மின் உற்பத்திக்கு மூலப்பொருளாக நிலக்கரி உள்ளதால், அவற்றை எரிக்கும்போது பெருமளவு கரியமில வாயு வெளியேறி காற்றில் கலக்கின்றது. அதுபோல் வாகனப் பயன்பாட்டுக்கு பெட்ரோலியத்திலிருந்து பெட்ரோல், டீசல் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றை வாகனங்களில் பயன்படுத்தும் போது அவற்றிலிருந்து கரியமில வாயு, நைட்ரஸ் ஆக்ஸ்டு, கார்பன் மோனாக்ஸ்டு உள்ளிட்ட வாயுக்கள் வெளியேறி காற்றில் கலக்கின்றன. அடுத்த சில ஆண்டுகளில் கச்சா எண்ணெய், நிலக்கரி உள்ளிட்டவை தீர்ந்து விடும் நிலை உள்ளதாகக் கூறப்படுகிறது. கச்சா எண்ணெய் தேவையில் இந்தியா 80 % இறக்குமதி செய்கிறது. இதனால் ஆண்டுக்கு ரூ. 8 லட்சம் கோடி அன்னியச் செலாவணி இழப்பு ஏற்படுகிறது.

இந்நிலையில், மின் தேவையை நிறைவு செய்து கொள்ள மரபு சாரா ஆதாரங்களிலிருந்து எரிசக்தி முறைகளைக் கண்டறிந்து பயன்படுத்துவது ஒன்றே சரியான தீர்வாக அமையும். இந்தியாவில் மாற்று எரிசக்தியைத் தயாரிக்க ஏராளமான வளங்கள் உள்ள நிலையில், அதை முழுமையாகப் பயன்படுத்த உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக, மரபு சார்ந்த எரிசக்தி முறைகளிலேயே அதிக அளவு மின் உற்பத்தி செய்யப்படுகிறது. நீர்மின் சக்தி, அனல் மின் சக்தி, அணு மின்சக்தி ஆகியவை மரபு சார்ந்த மின் உற்பத்தி முறைகளாகும். காற்றாலை மின் உற்பத்தி, சூரிய சக்தி, கடலலை மின் உற்பத்தி, பயோகேஸ் மின் உற்பத்தி, சாண எரிவாயு மின் உற்பத்தி, பயோமாஸ்

மின் உற்பத்தி உள்ளிட்டவை மரபு சாரா மின் உற்பத்தி முறைகளாகும். இயற்கையாக வீசும் காற்றின் திசைக்கு ஏற்ப காற்றாலை இயந்திரங்களை அமைத்து அவை சுழலுவதிலிருந்து கிடைக்கும் இயந்திர ஆற்றல் மின்னாற்றலாக மாற்றப்படுவது காற்றாலை மின் உற்பத்தி முறையாகும்.

சூரிய சக்தியிலிருந்து பெறப்படும் பயன்கள் இருவகையானவை. 1. சூரிய வெப்ப சக்தி சாதனங்கள், 2. சூரிய ஒளி மின் அமைப்புகள். இதில் சூரிய வெப்பச் சாதனங்களாக சூரிய அடுப்பு, சுடுநீர் சாதனங்கள், உலர்த்திகள் போன்றவற்றைக் கூறலாம். சூரிய ஒளி மின்சக்தியானது, சூரிய ஒளி மின் செல்கள் மூலமாக மின்சாரமாக மாற்றப்பட்டு பல்வேறு மின் சாதனங்களை இயக்கப் பயன்படுத்தப்படுகிறது. கடலலை மின் உற்பத்தியானது கடலில் ஏற்படும் அலையினால் உண்டாகும் அழுத்தத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் முறையாகும்.

பயோகேஸ் மின் உற்பத்தி முறையில், வீணாகும் காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களின் கழிவுகளை நொதிக்கச் செய்து, கிடைக்கும் உயிரி வாயு (பயோகேஸ்) மூலம் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

மரக் கழிவுகள், தாவரக் கழிவுகளை உலர்த்தி, அவற்றை எரித்துக் கிடைக்கும் வெப்ப ஆற்றலிலிருந்து பயோ மாஸ் மின் உற்பத்தி முறை மேற்கொள்ளப்படுகிறது. மின் உற்பத்திக்கு மரபு சாரா முறைகள் உள்ளதுபோல், பெட்ரோலுக்கு மாற்றாக எத்தனாலும், டீசலுக்கு மாற்றாக பயோ டீசலும் பயன்படுத்தலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை பெட்ரோல், டீசலுடன் கலந்தும் பயன்படுத்தலாம். இதனால் அதற்கான செலவு குறைவதுடன், சூழல் சீர்கேடும் குறையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதிகளவில் எத்தனால் உற்பத்தி செய்ய முயற்சித்தால் பெட்ரோலை எரித்து வெளியேறும் மாசு உள்ளிட்ட பாதிப்புகள் நேராமல் தடுக்கலாம்.

பயோ டீசலானது காட்டாமணக்கு, புங்கன் உள்ளிட்ட விதைகளிலிருந்தும், சமையல் எண்ணெய்யிலிருந்தும் உற்பத்தி

செய்யலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. சோளம், உருளைக்கிழங்கு, சமையல் எண்ணெய் உள்ளிட்டவற்றை எத்தனால், பயோ டீசல் உற்பத்திக்கு பயன்படுத்தினால் அதுசார்ந்த உணவுத் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு ஏற்படும் வாய்ப்புள்ளது. வேளாண் நிலப்பரப்பு குறைந்து வரும் நிலையில் பயோ டீசலுக்கு விளைச்சல் நிலம் ஒதுக்குவது உணவு உற்பத்தியை பாதிக்கும் என்ற நிலை உள்ளது. உணவு உற்பத்தியைப் பாதிக்காத வகையில், அதேசமயம், அதிகளவு எண்ணெய் கிடைக்கும் வகையில் காட்டாமணக்கை கண்டறிய முயற்சிக்கலாம். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் அதிகளவில் எண்ணெய் தரக்கூடிய சத்ரபதி என்ற காட்டாமணக்கை உருவாக்கியது. இந்த விதைகளிலிருந்து 49.2% எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது. அனைத்துப் பகுதிகளிலும் பயிரிட ஏற்றது என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2030-க்குள் மாசு வெளியேற்ற அளவு 35 சதவீதம் வரை குறைக்கப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், மரபு சாரா எரிசக்தி மூலமான பயன்பாட்டை படிப்படியாக அதிகரிக்க முயற்சிக்க வேண்டியது அவசியமாகும்.

## 16-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விழுப்புரத்தில் வரும் 16ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.இது குறித்து மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் அக்டோபர் 16-ம் தேதி (வெள்ளிக்கிழமை) ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறுகிறது.

மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சங்க பிரதிநிதிகளும், விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று கோரிக்கைகளை மனுவாக அளித்து பயனடையலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## புதுவையில் நள்ளிரவில் பலத்த மழை

புதுச்சேரியில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பலத்த மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.அரபிக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக கர்நாடகம், கேரளம், தெலங்கானா மற்றும் தமிழகத்தின் வட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.இந்நிலையில் மீண்டும் இரு நாட்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஆங்காங்கே கன மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் புதுச்சேரியில் கனமழை பெய்தது. இதனால் சாலைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. காலை வரை பெய்த மழை காரணமாக பள்ளி மற்றும் அலுவலகங்களுக்கு செல்வோர் பெரிதும் சிரமத்திற்குள்ளாயினர். வடகிழக்கு பருவமழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக தற்போது பெய்துவரும் திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி: அமைச்சர்கள் பங்கேற்பு



மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி சென்னை குடிநீர் வாரியம் சார்பில் மெரீனா கடற்கரையில் திங்கள்கிழமை (அக்.12) நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் அமைச்சர்கள் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

இந்தப் பேரணியின்போது மண்ணின் தன்மைக்கேற்ப அமைக்கப்பட வேண்டிய மழைநீர் சேகரிப்பு முறைகள், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் குறித்த பராமரிப்பு முறைகள், கழிவுநீர் அமைப்புகளைப் பராமரிக்க தவிர்க்கப்பட வேண்டிய முறைகள், குடிநீர் சிக்கனம் போன்ற தகவல்கள் அடங்கிய கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

வடகிழக்குப் பருவமழையைக் கருத்தில்கொண்டு நிகழாண்டுக்கான மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே உருவாக்கும் வகையில் இந்தப் பேரணி நடத்தப்படுவதாகவும், பொதுமக்கள் தங்களது வீட்டின் மொட்டை மாடிகளில் பெய்யும் மழைநீரை சேமிப்பது போல, கட்டடம் தவிர பிற பகுதிகளிலும் பெய்யும் மழைநீரைச் சேமிப்பதற்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என்று, சென்னை குடிநீர் வாரியத்தின் நிர்வாக இயக்குநர் பி.சந்திரமோகன் கேட்டுக்கொண்டார். மெரீனா கடற்கரை உழைப்பாளர் சிலை அருகே தொடங்கிய பேரணி காந்தியடிகள் சிலை அருகே நிறைவுபெற்றது.

முன்னதாக, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேரணியைத் தொடக்கி வைத்தார். இதில் அமைச்சர்கள் பா.வளர்மதி, எஸ்.கோகுல இந்திரா, மேயர் சைதை துரைசாமி, துணை மேயர் பெஞ்சமின், தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், குடிநீர் வாரியத்தினர் கலந்துகொண்டனர்.

### கொடைக்கானலில் கேரட் விளைச்சல் குறைவு

கொடைக்கானலில் பருவ மழை பொய்த்ததால் கேரட் விளைச்சல் குறைந்ததையடுத்து விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கொடைக்கானல் பகுதிகளான வில்பட்டி, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, பள்ளங்கி, கோம்பை, வடகவுஞ்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்

நூற்றுக்கணக்கான ஏக்கரில் கேரட் பயிரிடப்பட்டிருந்தது. இந்நிலையில் கொடைக்கானலில் ஜூன் மாதம் பருவ மழை பொய்த்ததால் கேரட் விளைச்சல் குறைந்தது. தற்போது விளைந்த கேரட்டை எடுத்து அவற்றை சந்தைக்கு அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது.

இது குறித்து வில்பட்டி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: கொடைக்கானல் பகுதியில் பருவ மழை பொய்த்ததால் கேரட் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. நன்கு விளைந்த கேரட் ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை விலை போகும். தற்போது ஒரு கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விலை போகிறது. இதனால் எங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மழைக் காலங்களில் வீணாக செல்லும் தண்ணீரை சேமித்து வைக்க வில்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் தடுப்பணை கட்டி விவசாயத்துக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் தெரிவித்தனர்.

### தேனி மாவட்டத்தில் மழை

தேனி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:

ஆண்டிபட்டி- 8.6, போடி- 4.4, கூடலூர்- 2, மஞ்சளாறு- 30, பெரியகுளம்- 15, சோத்துப்பாறை- 17, வைகை அணை நீர்பிடிப்பு பகுதி- 7, வீரபாண்டி- 4, உத்தமபாளையம்- 2.6

அணைகளின் நீர்மட்டம்: வைகை அணை நீர்மட்டம் 47.90 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 361 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 60 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மஞ்சாளறு அணை நீர்மட்டம் 56.80 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 196 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 196 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 98.40 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 20 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 3 கன அடி வீதம் தண்ணீர் வெளியேறுகிறது. பெரியாறு அணை நீர்மட்டம் 117.40 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 516 கன அடி. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 511 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பு மற்றும் தேக்கடியில் மழை பொழிவு இல்லை.

### மழைக்கு ஏங்கும் விவசாயிகள்

திருவாடானை தாலுகாவில் சுமார் 1 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர். ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை செலவு செய்து செய்துள்ளனர். தற்போது பயிர்கள் முளைத்து வரும் நிலையில் தேவையான நீராதாரம் இல்லை. தற்போது கடுமையான வெயில் அடித்து வரும் நிலையில் பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன. மழை பெய்யாவிட்டால் பெரும் இழப்பு ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

### ஈரோடு மாவட்டத்தில் இரவு முழுவதும் மழை: அணைகள், குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

ஈரோடு மாவட்டம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த மழையால், அணைகள், குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இம்மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக வெயிலின் கொடுமை அதிகமாக இருந்தது.

இந்நிலையில், மாவட்டம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென மழை பெய்தது. பெரும்பாலான இடங்களில் இரவு 10 மணிக்கு மேல் பெய்ய தொடங்கிய மழை விடிய, விடிய கொட்டியது.

ஈரோடு நகரில் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு திடீரென மேகக் கூட்டங்கள் சூழ்ந்தது. பின்னர் இடி, மின்னலுடன் மழை பெய்யத் தொடங்கியது. இரவு 9 மணிக்கு மேல் கன மழை கொட்டியது. திங்கள்கிழமை காலை 9 மணி வரை மழை தொடர்ந்தது. பல இடங்களில் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் குடை பிடித்தபடி சென்றனர். மாவட்டத்தில் அதிகபட்சமாக கோபி பகுதியில் 91 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது. இதனால் தாழ்வான பகுதியில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

கோபி நகரின் மையப் பகுதியில் கீரிப்பள்ளம் ஓடையில் தண்ணீர் ஆர்ப்பரித்து ஓடியது. கொளப்பலூர், செவியூர், மொடச்சூர், அளுக்குளி, கூகலூர், கரட்டடிபாளையம், குள்ளம்பாளையம், பொலவகாளி பாளையம் உள்பட சுற்றுவட்டார பகுதிகளிலும் கனமழை கொட்டி தீர்த்தது.

இதேபோல், நம்பியூர் பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது. இங்கு 87 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

சத்தியமங்கலம், பு.புளியம்பட்டி, பவானிசாகர் மற்றும் தாளவாடி, ஆசனூர், திம்பம், தலமலை, கடம்பூர், அந்தியூர், பர்கூர் ஆகிய வனப்பகுதிதளிலும் திங்கள்கிழமை இரவு முதல் விடிய, விடிய மழை பெய்தது.

இந்த மழையால் வனப்பகுதி முழுவதும் பசுமையாக மாறி வருகிறது. வன விலங்குகளின் தண்ணீர் பஞ்சமும் தீர்ந்து உள்ளது. இதேபோல் பவானி, அம்மாபேட்டையிலும் ஞாயிற்றுக்கிழமை இரவு நல்ல மழை பெய்தது. இந்த மழையால் அப்பகுதி முழுவதும் குளிர்ச்சியாக காணப்பட்டது.

அம்மாபேட்டை, அதன் சுற்றுப்புற பகுதிகளான சிங்கம்பேட்டை, நெரிஞ்சிபேட்டை, சித்தார், காடப்ப நல்லூர் ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது. மேலும் பெருந்துறை, சென்னிமலை, கவுந்தப்பாடி உள்பட ஈரோடு மாவட்டம் முழுவதும் மழைக் கொட்டி தீர்த்தது.

ஈரோடு, பெரியார் நகர் குளத்துப்பண்ணை பகுதியை சேர்ந்தவர் மணிகண்டன் (47). கட்டடமேஸ்திரி. ஈரோட்டில் பெய்த கனமழையால் நேற்று காலை இவரது வீட்டுச்சுவர் இடிந்து விழுந்தது. இதில் சுவர் அருகே உள்ள பெரும்ஓடை பள்ளத்தில் சுவர் விழுந்தது. வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த மணிகண்டன், அவரது மகன்கள் பிரகாஷ்,ஈஸ்வரன் ஆகியோர் அதிர்ஷ்டவசமாக காயமின்றி உயிர் தப்பினர். பெருந்துறை அருகே பெரிய மடத்து பாளையம் பகுதியில் சீனிவாசன் என்ற விவசாயியின் வீடு இடிந்து விழுந்தது. இதில் வீட்டில் இருந்தவர்கள் காயமின்றி தப்பினர்.

மாவட்டத்தில் பதிவான மழை விவரம்(மில்லி மீட்டரில்) கோபி 91, நம்பியூர் 87, பெருந்துறை 56, கவுந்தப்பாடியில் 52.2, சென்னிமலை 45, அம்மாப்பேட்டை 43.2, ஈரோடு 35, சத்தியமங்கலம் 26, தாளவாடி 33, பவானி 21, மொடக்குறிச்சி 21, பவானிசாகர் 17, என்ற அளவில் மழை பதிவானது.

### நீலகிரியில் தொடர்கிறது மழை

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

மாவட்டத்தில் சில இடங்களில் பலத்த மழையும், சில இடங்களில் லேசான மழையும் பெய்து வருகிறது.

மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 305 மி.மீ மழை பதிவாகியுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் பதிவான மழை விவரம்: (மில்லி மீட்டரில்)

கொடநாடு 85, கேத்தி 48, கிளன்மார்கன் மற்றும் குன்னூர் தலா 34, நடுவட்டம் 32, பர்லியாறு 18, கல்லட்டி 15, கூடலூர் 10, கோத்தகிரி 9.5, உதகை 9, எமரால்டு, கெத்தை, தேவாலா மற்றும் அவலாஞ்சி தலா 2, கிண்ணக்கொரை மற்றும் குந்தா தலா 1. என்ற அளவில் மழை பதிவாகியுள்ளது.

**வேளாண் இயந்திரங்களை மானிய விலையில் பெற அழைப்பு**

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள், கருவிகளை வாங்கிப் பயன்பெறுமாறு வேளாண் துறை அழைப்பு விடுத்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 2015-16-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை இயந்திரமயமாக்குதலுக்கான குறு இயக்கத்தின் கீழ் வேளாண்மை இயந்திரங்கள், கருவிகளை மானிய விலையில் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, இந்தத் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள், கருவிகளை மானியத்தில் பெற விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் 40 முதல் 70 குதிரைத் திறன் கொண்ட டிராக்டர், விதைக்கும் கருவி, நெல் நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, சோகை வெட்டும் கருவி ஆகியவை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைய விரும்பும் விவசாயிகள் தங்களது பெயர், முகவரி, சர்வே எண், சிட்டா அடங்கல்

ஆகியவற்றுடன் திருவண்ணாமலை, ஆரணி பகுதிகளில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களை அணுகலாம்.

திருவண்ணாமலை, போளூர், செங்கம், தண்டராம்பட்டு, கலசப்பாக்கம், சேத்துப்பட்டு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வே.பொ.,), எண்.413, பசுவண்ணன் நகர், குறிஞ்சி நகர், வேங்கிக்கால், திருவண்ணாமலை - 606 604 என்ற முகவரியில் இயங்கும் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தை அணுகலாம்.

ஆரணி, செய்யாறு, வந்தவாசி, வெம்பாக்கம் வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வே.பொ.,), எண்.67, கார்த்திகேயன் சாலை, சைதாப்பேட்டை, ஆரணி என்ற முகவரியில் இயங்கும் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தை அணுகலாம் என்று மாவட்ட வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

## நெற்பயிரில் புகையான் நோய்த் தாக்குதல்:வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புகையான் நோய்த் தாக்கிய நெல் பயிர்களை வேளாண் அலுவலர்கள், விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

இதுகுறித்து பையூரில் உள்ள கோவை வேளாண் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலையம் சார்பில் அண்மையில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது 10,700 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழை தொடங்கியுள்ள நிலையில், கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டணம் வட்டாரங்களில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் (வேளாண்மை) நேர்முக உதவியாளர் சுமதி, வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) ரவீந்தர், பையூரில் உள்ள கோவை வேளாண் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஜலாலுதீன், உதவிப் பேராசிரியர்கள்

ஆனந்த், திலகம் ஆகியோர் கொண்ட குழுவினர் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

கிருஷ்ணகிரி அருகே உள்ள மலையாண்டஅள்ளி, மலை சந்து ஆகிய கிராமங்களில் வயல்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிர்களை ஆய்வு செய்ததில் பயிரில் புகையான் நோய்த் தாக்குதல் ஆரம்ப நிலையில் உள்ளது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு நோய்க் கட்டுப்படுத்தும் வழிமுறைகள், பூச்சி மருந்துகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.

## அக்.16-இல் விவசாயிகள் குறை தீர் கூட்டம்

சேலம் மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் அக்டோபர் 16-ஆம் தேதி நடைபெற உள்ளது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதல் தளக் கூட்டரங்கில் வரும் அக்.16-ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ள கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான தங்களது குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எடப்பாடி, சங்ககிரியில் கனமழை

எடப்பாடியில் பெய்த கன மழையால் எடப்பாடி பேருந்து நிலையக் கடைகளுக்குள் மழைநீர் புகுந்தது.

எடப்பாடியில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை காலை 7 மணி வரை மழை பெய்தது. இந்த பலத்த மழையால் பஸ்நிலையத்தினுள் ஏராளமான தண்ணீர் புகுந்தது. பேருந்து நிலையத்தில் உள்ள சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டதால் பேருந்து நிலையத்தில் உள்ள பூ, பாத்திரம், பழக்கடைகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் வியாபாரிகள் பெரும் அவதிக்குள்ளானார்கள். பேருந்து நிலையத்தில்

தேங்கிய மழைநீர், இரவு முழுவதும் வெளியேறாததால் பொதுமக்களும் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

இந்த மழையால் எடப்பாடி நகராட்சியின் பல பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த திடீர் மழையால் நகராட்சி பகுதியில் வெள்ளாண்டிவலசு, கவுண்டம்பட்டி, நைனாம்பட்டி, பேருந்து நிலையம் என இடங்களில் உள்ள சாக்கடைகளில் அடைப்பு ஏற்பட்டதால் அப்பகுதிகளில் மழைநீர், ரோடுகளில் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடியது.

எடப்பாடி பேருந்து நிலையத்தில் மழைநீர் தேங்கியதால் அங்கு இருந்த வியாபாரிகளும், மக்களும் சேர்ந்து அங்கு இருந்த பேருந்து நிலையத்தின் கான்கிரீட் காரையைப் பெயர்த்து நீரை வெளியேற்றினர். பின்னர் பேருந்து நிலையத்தில் இருந்த மழைநீர் வெளியேறியது.

தம்மம்பட்டியில்...

தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி, நாகியம்பட்டி, கொண்டயம்பள்ளி, கோனேரிப்பட்டி, உலிபுரம், வாழக்கோம்பை, மண்மலை மற்றும் கெங்கவல்லி சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை விடியற்காலை வரை தொடர்ந்து மழை பெய்தபடியே இருந்தது. இதனால் சுவேத நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சங்ககிரியில்...

இளம்பிள்ளை பகுதியில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் அப்பகுதியில் உள்ள ஏரி நிரம்பி 100-க்கும் மேற்பட்ட தாழ்வான வீடுகளில் திங்கள்கிழமை மழை நீர் புகுந்ததால் தறிக் கூடங்களில் மழைநீர் புகுந்தது. பொதுமக்கள் வீட்டை வீட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

மழை நீர் சூழ்ந்த பகுதியை சேலம் தெற்கு வட்டாட்சியர் மகேஸ்வரன், கிராம நிர்வாக அலுவலர் சுந்தரராஜன், பேரூராட்சி செயல் அலுவலர் சீனிவாசன் ஆகியோர் பார்வையிட்டு மழை நீரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

**மீத்தேன் திட்ட அனுமதி மறுப்புக்கு விவசாய சங்கம் பாராட்டு**

காவிரிப் படுகையில் மீத்தேன் எடுக்கும் திட்டத்துக்கு அனுமதி கிடையாது எனத் தமிழக அரசுப் பிறப்பித்த அரசாணைக்கு தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தர விமல்நாதன் தெரிவித்தது:

மீத்தேன் தொடர்பாக மக்களிடையே ஏற்பட்டிருந்த மிகப் பெரிய மனக் கொந்தளிப்பு, மன உளைச்சல் இரண்டுக்கும் இப்போது தீர்வு காணப்பட்டுள்ளது. இதற்காக தமிழக முதல்வருக்குக் காவிரி டெல்டாவை சார்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் அனைத்து பொதுமக்களும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மக்களின் உணர்வுகளை உணர்ந்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது.

கடந்த மக்களவைத் தேர்தலில் தமிழக முதல்வர் பிரசாரத்தின்போது டெல்டா மாவட்ட மக்களுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த அரசாணையை நிரந்தர அரசாணையாக்க வேண்டும். இனிவரும் எக்காலத்திலும் மீத்தேன் எடுக்கும் பணியைத் தமிழக அரசு அனுமதிக்காது என்ற உறுதிமொழியை எதிர்பார்க்கிறோம்.

மீத்தேன் மற்றும் பாறை எரிவாயு (ஷேல் கேஸ்) எடுக்கமாட்டோம் என்ற உறுதிமொழியையும் மத்திய அரசிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம். இதில், மத்திய அரசு நிலைப்பாடு என்ன என்பதை விளக்க வேண்டும்.

## 15இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அக். 15 ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் மாதம்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, அக்டோபர் மாதத்துக்கான குறைதீர் கூட்டம் 15 ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ம. ரவிகுமார் தலைமையில் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில், விவசாய சங்கத் தலைவர்கள், பாசன சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டு தங்களது குறைகளை தெரிவித்து பயன்பெறலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென் மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும்; வானிலை அதிகாரி தகவல்



சென்னை,

வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் 20-ந்தேதி அல்லது அதற்கு சில நாட்கள் முன்பாக அல்லது சில நாட்கள் பின்பாக தொடங்கும். அவ்வாறு வடகிழக்கு பருவமழை தொடங்க இன்னும் ஒருவாரம் தான் இருக்கிறது. இந்தநிலையில் சென்னை வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரி நேற்று கூறியதாவது:-

வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டில் பல இடங்களில் மழை பெய்துவருகிறது. வடகிழக்கு பருவமழை 3 நாட்களுக்குள் தொடங்குவதற்கான அறிகுறி இல்லை. தென் மாவட்டங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) சில இடங்களில் கனமழை பெய்யும். வடமாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். நாளை (புதன்கிழமை) தென் மாவட்டங்களில் பல இடங்களிலும், உள் மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யும். இவ்வாறு அதிகாரி தெரிவித்தார். நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேர மழை அளவு வருமாறு:-

வேம்பாவூர், தஞ்சை தலா 14 செ.மீ., சத்திரப்பட்டி, சோழவந்தான் தலா

13 செ.மீ., துறையூர் 12 செ.மீ., மங்களாபுரம் 11 செ.மீ., ஏற்காடு, விராலிமலை தலா 10 செ.மீ., கோபிச்செட்டிப்பாளையம், வாழப்பாடி, மேல்அணைக்கட்டு, திருப்பூர் தலா 9 செ.மீ., செந்துறை 8 செ.மீ., ஒசூர், சேலம், பேரையூர், பாலக்கோடு, தஞ்சைமாவட்டம் பாபநாசம், திருக்கோவிலூர் தலா 7 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் 100 இடங்களில் மழை அளவு பதிவாகி உள்ளது.

## சுல்தான்பேட்டையில் கறிக்கோழி விலை கடும் வீழ்ச்சி உற்பத்தியாளர்கள் கவலை



சுல்தான்பேட்டை

சுல்தான்பேட்டையில் கறிக்கோழி விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளதால் உற்பத்தியாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

கறிக்கோழி பண்ணைகள்

சுல்தான்பேட்டை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் 500-க்கும் மேற்பட்ட கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. இங்கு உற்பத்தி

செய்யப்படும் கறிக்கோழிகள் தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கும், கேரளாவுக்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பண்ணை கொள்முதல் விலை பல்லடத்தில் உள்ள கறிக்கோழி ஒருங்கிணைப்புக்குழு (பி.சி.பி.) சார்பில் நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

புரட்டாசி மாதம் தொடங்குவதற்கு முன்பு பண்ணை கொள்முதல் ஒரு கிலோ ரூ.70-ஆக இருந்தது. இந்த விலை கடந்த 1-ந் தேதி ரூ.64-ஆக குறைந்தது. தொடர்ந்து விலை கடும் வீழ்ச்சி அடைந்து தற்போது ஒரு கிலோ ரூ.55 ஆக உள்ளது. இதனால் உற்பத்தியாளர்கள் கவலை அடைந்து உள்ளனர்.

உற்பத்தி செலவு

இது குறித்து உற்பத்தியாளர்கள் கூறியதாவது:-

ஒரு கிலோ கறிக்கோழி உற்பத்தி செய்ய ரூ.68 முதல் ரூ.70 வரைக்கும் செலவாகிறது. ஆனால் தற்போது ஒரு கிலோ கொள்முதல் விலை ரூ.55 ஆக உள்ளது. இதனால் ஒரு கிலோவுக்கு ரூ.13 முதல் ரூ.15 வரை நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.தற்போது புரட்டாசி மாதம் என்பதாலும், மழை பெய்து வருவதாலும் கறிக்கோழி நுகர்வு குறைந்துள்ளது. இதனால் கடைகளில் இறைச்சி விற்பனை மிகவும் மந்தமாக உள்ளது. இதன் காரணமாக விலை குறைந்து வருவதுடன், நஷ்டமும் ஏற்பட்டு வருகிறது.

எதிர்பார்ப்பு

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு இறைச்சி கடைகளில் ஒரு கிலோ கறிக்கோழி இறைச்சி ரூ.140-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கிலோ கறிக்கோழி இறைச்சி ரூ.100 முதல் ரூ.110 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனாலும் விற்பனை குறைவாகவே உள்ளது.

வருகிற 18-ந் தேதி ஐப்பசி மாதம் தொடங்குவதால் அதன் பின்னர் விற்பனை அதிகரித்து விலை உயரும் என்று எதிர்பார்த்துள்ளோம். கடும் விலை வீழ்ச்சி எங்களை மிகவும் பாதித்துள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## மாவட்டம் முழுவதும் பரவலாக மழை: அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 53 மில்லி மீட்டர் பதிவு



கடலூர்,

மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 53 மில்லி மீட்டர் பதிவானது.

பலத்த மழை

கடலூர் மாவட்டத்தில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. குறிப்பாக இரவு நேரங்களில் இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்நிலையில் கடலூரில் நேற்று அதிகாலை 4 மணி அளவில் லேசான சாரல் மழை பெய்ய ஆரம்பித்தது. சற்று நேரத்தில் பலத்த மழையாக பெய்ய தொடங்கியது. இந்த மழை காலை 9 மணி வரை நீடித்தது. இதனால் காலையில் பள்ளி, கல்லூரிகளுக்கு சென்ற சில மாணவ-மாணவிகள் மழையில் நனைந்தபடி சென்றனர். பெற்றோர் தங்கள் குழந்தைகளை மழையில் நனையாதபடி குடைபிடித்தும், மழை கோட்டு அணிந்தும் பள்ளிக்கூடங்களுக்கு அழைத்துச்சென்றதையும் காண முடிந்தது. இதேபோல் அலுவலகங்கள், வேலைகளுக்கு செல்வோரும் மழையில் நனைந்தபடி சென்றனர்.

பரங்கிப்பேட்டையில் அதிகபட்ச மழைஇந்த மழையினால் முக்கிய சாலைகள் மற்றும் தாழ்வான இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நின்றது. சீரான வேகத்தில் மழை பெய்ததால் சுரங்கப்பாதையில் அதிக அளவு தண்ணீர் தேங்கவில்லை. இதேபோல் சிதம்பரம், பரங்கிப்பேட்டை, புவனகிரி, பண்ருட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் மழை பெய்தது.மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்த மழையினால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டனர். மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 53 மில்லி மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக சிதம்பரம் அண்ணாமலைநகரில் 1.40 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது. சராசரியாக 4.84 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. மற்ற இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:-

கடலூர் - 17.20

தொழுதூர் - 9

கொத்தவாச்சேரி - 8

புவனகிரி - 7

லக்கூர் - 2.10

சிதம்பரம் - 2

பண்ருட்டி - 2

**தொழுதூர் அணைக்கட்டில் இருந்து வெலிங்டன் ஏரிக்கு 2 ஆயிரத்து 800 கன அடி நீர் திறந்து விடப்பட்டது**



திட்டக்குடி,

வெள்ளாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக தொழுதூர் அணைக்கட்டில் இருந்து 2 ஆயிரத்து 800 கனஅடி நீர் வெலிங்டன் திறந்துவிடப்பட்டது.

<u>வெள்ளாற்றில் வெள்ளப்பெருக்கு</u>

சேலம் மாவட்டத்தில் மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று முன்தினம் கனமழை பெய்தது. இதன் காரணமாக வெள்ளாற்றில் நீர் வரத்து அதிகரிக்க தொடங்கியது. வினாடிக்கு 3 ஆயிரத்து 600 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இந்த நீர் நேற்று அதிகாலை திட்டக்குடி தொழுதூர் அணைக்கட்டை வந்தடைந்தது.

இதையடுத்து பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பெரியசாமி தலைமையிலான அதிகாரிகள் அணைக்கட்டு பகுதியை கண்காணித்து, நீரை திறந்து விட்டனர். அதாவது அணைக்கட்டில் இருந்து வெலிங்டன் ஏரிக்கு செல்லும் வரத்து வாய்க்கால் மூலம் வினாடிக்கு 2 ஆயிரத்து 800 கன அடி நீர் திறந்து விடப்பட்டது. அதேபோல், வெள்ளாற்றில் 800 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது.

27 அடி கொள்ளளவு கொண்ட வெலிங்டன் ஏரி, மாவட்டத்தில் 2–வது பெரிய நீர் தேக்கமாக இருந்து வருகிறது. தற்போது நீர் வரத்து தொடங்கி இருப்பதால் 8 அடியில் இருந்த ஏரியின் நீர்மட்டம் ஒரே நாளில் ஒரு அடி உயர்ந்து, 9 அடியாக இருக்கிறது.

## நீர் வரத்து குறைந்தது

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், வெள்ளாற்றின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த கனமழையின் காரணமாக ஆற்றில் தண்ணீர் வந்து கொண்டுள்ளது. நேற்று அதிகாலையில் 3 ஆயிரத்து 600 கனஅடியாக நீர் வரத்து இருந்தது வந்தது. மழை அளவு குறைந்ததால், மதியம் நீர் வரத்து 3 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. இதனால் வெள்ளாற்றில் திறந்துவிடப்பட்ட 800 கனஅடி நீர் நிறுத்தப்பட்டது.தொடர்ந்து விவசாய நிலங்களின் பாசனத்துக்காக வெலிங்டன் ஏரிக்கு 2 ஆயிரத்து 800 கனஅடி நீர் ஏரிக்கு திறந்து விடப்பட்டுள்ளது தொடர்ந்து நீர் வரத்து இருந்துவந்ததால் ஏரியின் நீர்மட்டம் உயர்வதற்கு வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.

## வாய்க்கால்களை தூர்வார வேண்டும்

இதற்கிடையே வெலிங்டன் பாசன விவசாயிகள் ஏரியின் நீர்வரத்து வாய்க்கால் மற்றும் பாசன வாய்க்கால்கள் அனைத்தும் தூர்வாரப்படாமல் கிடக்கிறது. தற்போது ஏரிக்கு தண்ணீர் வரத்து இருந்தும் அவை முழுமையாக ஏரியை வந்தடையுமா என்பது சந்தேகம் தான். எனவே 68 கிராம விவசாயிகளின் நலன் கருதி பருவமழை தொடங்கும் முன் வாய்க்கால்களை தூர்வார வேண்டும் என்று தெரிவித்தனர்.

## நீர்ப்பிடிப்பு பகுதியில் பலத்த மழை: குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பி வழிகிறது



ஈரோடு,

நீர்பிடிப்பு பகுதியில் பெய்த பலத்த மழையால் குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பி வழிகிறது. இதனால் கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ளஅபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

<u>நிரம்பி வழிகிறது</u>

ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால் பல இடங்களில் உள்ள குளங்கள் நிரம்பி வருகின்றன.

கோபி அருகே உள்ளது குண்டேரிப்பள்ளம் அணை. இந்த அணையின் நீர்பிடிப்பு பகுதிகளாக விலாங்கோம்பை, கடம்பூர், குன்றி, கெம்பனூர் ஆகிய பகுதிகள் உள்ளன. இந்த அணையின் மொத்த உயரம் 42 அடி ஆகும். இந்த அணையின் மூலம் கொங்கர்பாளையம், கவுண்டன்பாளையம், வாணிப்புத்தூர், புஞ்சைதுறையாம்பாளையம் உள்பட பல பகுதிகளை சேர்ந்த 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த நிலையில் குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வந்தது. இதன்காரணமாக குண்டேரிப்பள்ளம் அணை தனது முழுகொள்ளளவான 42 அடியை கடந்த 2 நாட்களுக்கு முன்பு எட்டியது. அணை நிரம்பியதை

தொடர்ந்து அணையில் இருந்து வினாடிக்கு 8 கனஅடி உபரி நீர் வெளியேற்றப்பட்டது.

வெள்ள அபாய எச்சரிக்கை

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு குண்டேரிப்பள்ளம் அணை நீர்பிடிப்பு பகுதியில் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால் அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு வினாடிக்கு 256 கன அடியாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. இதனைத்தொடர்ந்து அணை நிரம்பி வழிகிறது. உபரிநீர் அதிக அளவில் வெளியேறியதை தொடர்ந்து அணையை கோபி தாசில்தார் ஆறுமுகம், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதனைத்தொடர்ந்து குண்டேரிப்பள்ளம் அணை நீர் செல்லும் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை தண்டோரா மூலம் விடப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று தங்குமாறு வருவாய்த்துறை சார்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

நிரம்பி வருகிறது

சத்தியமங்கலம் அருகே உள்ள கடம்பூர் மலைப்பகுதியின் அடிவாரத்தில் கே.என்.பாளையத்தில் பெரும்பள்ளம் அணை உள்ளது. இந்த அணையின் நீர்மட்ட உயரம் 30 அடி ஆகும். இந்த நிலையில் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் நேற்று முன்தினம் விடிய விடிய பலத்த மழை பெய்தது.

இதன்காரணமாக அணையின் நீர்மட்டம் 27.25 அடியாக உயர்ந்து உள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணை நிரம்பி வருகிறது. இதேபோல் அந்தியூர் அருகே உள்ள பர்கூர் மலைப்பகுதியில் உள்ள வரட்டுப்பள்ளம் அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 33.33 அடி ஆகும். அணையின் நீர்பிடிப்பு பகுதியில் நேற்று விடிய விடிய மழை பெய்ததால் அணையின் நீர்மட்டம் 22.5 அடியாக உயர்ந்து உள்ளது.

## பெரம்பலூர் மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம்



பெரம்பலூரில் கடந்த சில நாட்களாக பகல் நேரத்தில் கடுமையான வெயிலும், மாலைநேரத்தில் இதமான தட்பவெப்பநிலையை தொடர்ந்து இரவில் மழையும் தொடர்¢ந்து பெய்கிறது. இதனால் ஏரி-குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலைவரை பலத்த மழை பெய்தது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி பெரம்பலூர் மாவட்டத்தில் பதிவான மழைஅளவு விவரம்:- பெரம்பலூர்- 42மி.மீ, வேப்பந்தட்டை- 136மி.மீ, தழுதாழை- 47மி.மீ. பாடாலூர்- 19மி.மீ, செட்டிக்குளம்- 18 மி.மீ, மொத்தம்- 262 மி.மீ., சராசரி மழை அளவு- 52.4 மி.மீ.

## அதிக ருசி கொண்ட நெய் மீன் விலை கடும் வீழ்ச்சி கிலோ ரூ.600-க்கு விற்றது ரூ.200 ஆனது

ராமேசுவரம் அருகே பாம்பன் பகுதியில் நாட்டுப் படகு மற்றும் விசைப்படகுகளில் செல்லும் மீனவர்கள் வலையில் விளை, கிளி, முரல், கிளாத்தி, திருக்கை, பாறை, சீலா மீன் உள்ளிட்ட மீன்கள் கிடைக்கும். இந்த மீன்களிலேயே அதிக ருசி கொண்டது சீலா மீன். இந்த மீனை நெய்

மீன், வஞ்சிரம் என்று மீன் பிரியர்கள் அழைப்பதுண்டு. எப்போதும் சீலா மீன் விலை அதிகமாகவே இருக்கும். கடந்த 1 மாதத்திற்கு முன்பு வரை பாம்பன் பகுதியில் சீலா மீன்கள் 1 கிலோ ரூ.600 வரை விற்பனையானது.இந்தநிலையில் தற்போது பாம்பன் பகுதியில் கடந்த 1 வாரத்திற்கு மேலாக சீலா மீன்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. 1 கிலோ ரூ.600-க்கு விற்ற சீலா மீன் தற்போது 1 கிலோ ரூ.200க்கு விற்பனையாகிறது. இதனால் மீனவர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதுபற்றி மீனவர் ஒருவர் கூறுகையில், 'மீன்களிலேயே அதிக சுவை கொண்ட நெய் மீன் முள்ளே இல்லாமல் சாப்பிடுவதற்கு மெதுவாக இருக்கும். அதேபோல் விலையும் அதிகமாகவே இருக்கும். தற்போது இந்த மீன்கள் நாகப்பட்டினம், கோடியக்கரை, தொண்டி, நம்புதாளை உள்ளிட்ட பல ஊர் களிலும் அதிகம் கிடைக்கின்றன. எனவே தமிழகம் முழுவதும் இந்த மீன் கிடைப்பதால் வெளியூர்களுக்கு அனுப்பப்படாமல் பாம்பனில் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இது மீனவர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது' என்றார்.

### மாவட்ட உழவர் சந்தைகளில் ரூ.54 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனை




மகாளய அமாவாசையையொட்டி சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில்

253 டன் காய்கறிகள் ரூ.54 லட்சத்திற்கு விற்பனையானது.மகாளய அமாவாசைசேலம் மாவட்டத்தில், அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி, சூரமங்கலம், தாதகாப்பட்டி, ஆத்தூர், மேட்டூர், ஜலகண்டாபுரம், தம்மம்பட்டி, இளம்பிள்ளை, இடைப்பாடி உள்ளிட்ட 11 இடங்களில் உழவர் சந்தைகள் உள்ளன. இங்கு சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், தங்களது நிலத்தில் விளைந்த காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்து வருகிறார்கள்.நேற்று மகாளய அமாவாசையை என்பதால் உழவர் சந்தைகளில் வழக்கத்தை விட அதிகளவில் பொதுமக்கள் வந்து காய்கறிகள் வாங்கி சென்றனர். இதனால் மற்ற தினங்களை காட்டிலும் காய்கறிகள் அதிகமாக விற்பனையானது.

ரூ.54 லட்சம்

தாதகாப்பட்டி உழவர் சந்தையில் 212 விவசாயிகள் 31 டன் காய்கறிகளை கொண்டு வந்தனர். இதனை ரூ.8 லட்சத்து 75 ஆயிரத்து 500-க்கு 6,208 நுகர்வோர்கள் வாங்கி சென்றனர். அதேபோல் அஸ்தம்பட்டியில் 70 விவசாயிகள் கொண்டு வந்த 14 டன் காய்கறிகளை ரூ.5 லட்சத்து 19 ஆயிரத்து 85-க்கு 2,922 நுகர்வோர்கள் வாங்கி சென்றனர்.

அம்மாபேட்டையில் 45 டன் காய்கறிகள் ரூ.14 லட்சத்து 52 ஆயிரத்து 100-க்கு விற்பனையானது. அதிகபட்சமாக சூரமங்கலம் உழவர் சந்தையில் 252 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 44 டன் காய்கறிகள் ரூ.12 லட்சத்து 33 ஆயிரத்து 760-க்கு விற்பனையாது. இதனை 8 ஆயிரத்து 815 பேர் வாங்கி சென்றனர். நேற்று 11 உழவர்சந்தைகளில் 253 டன் காய்கறிகள் ரூ.54 லட்சத்து 10 ஆயிரத்து 850-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதனை 43 ஆயிரத்து 335 நுகர்வோர்கள் வாங்கி சென்றனர்.

75 வகை காய்கறிகள்

வெள்ளை பூசணி, சிவப்பு பூசணி, கொத்தவரங்காய், வெண்டைக்காய், அவரக்காய், அனைத்து வகையான கீரைகள், வாழைப்பழம், வாழை தண்டு, கூட்டு பொறியல் காய்கறிகள் அதிகளவில் விற்பனையானது. இதில் மொத்தம் 75 வகையான காற்கறிகள் உழவர்சந்தையில் விற்பனை செய்யப்பட்டது.

தினகரன்

டெல்டா மாவட்டங்களில் பலத்த மழை 1000 ஏக்கர் பயிர் நீரில் மூழ்கின



திருச்சி : தமிழகத்தில் வெப்ப சலனம் காரணமாக பரவலாக மழை பெய்துவருகிறது. டெல்டா மாவட்டங்களில் நேற்று முன்தினம் இரவு பல்வேறு இடங்களில் விடிய விடிய பலத்த மழை பெய்தது. பெரம்பலூர்: எளம்பலூர் எம்ஜிஆர் நகாில் இடி விழுந்ததில் ராமச்சந்திரன் என்பவரது தொகுப்பு வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது. திருச்சி: துறையூர்-திருச்சி சாலையில் காளிப்பட்டி அருகே ஏரி பகுதியில் அமைக்கப்பட்ட புதிய இணைப்பு சாலை 10அடி தூரம் துண்டிக்கப்பட்டு நீர் வெளியேறியது.

கொடியாலம், கருப்பூர் உள்ளிட்ட கிராமங்களில் வயலில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் 1000 ஏக்கர் சம்பா பயிர் நீரில் மூழ்கியுள்ளது. திருப்பூர்: திருப்பூரில் பல இடங்களில் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது. ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் விடியவிடிய கொட்டி தீர்த்த மழையால் ஓடைகள், ஏரிகள், குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. பெருந்துறை அருகே பெரியமடத்துப்பாளையம் கிராமத்தில் வீட்டு சுவர் இடிந்தது. பெருந்துறை அடுத்துள்ள விஜயமங்கலம் பள்ளக்கவுண்டன் பாளையத்தில் மண்பாண்ட தொழிலாளி துரைசாமி(50) மின்னல் தாக்கி பலியானார்.

நீலகிரி: ஊட்டியில் மலையேற்ற பயிற்சியில் ஈடுபட்டிருந்த குஜராத் வீரர் ராஜேஷ் டிக்கர்(46) காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலியானார்.

சேலம்: சேலம் மாவட்டம் தேவூர் பேரூராட்சியில் சென்றாயனூர் தெற்கு தோட்டம், குள்ளம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வயல்களில் மழை நீர் தேங்கியதால், நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. இளம்பிள்ளை பகுதியில் தொடர்ந்து பெய்த மழையால், சந்தைப்பேட்டையில் சுமார் 30 ஏக்கர் பரப்பு ஏரி நிரம்பியது. இதனால், பெருமாகவுண்டம்பட்டி பகுதியில் உள்ள 100க்கும் மேற்பட்ட வீடுகளிலும், விசைத்தறி கூடங்களிலும் வெள்ளம் புகுந்தது.

சேலம் அஸ்தம்பட்டி பகுதியில் நீதிமன்றத்தின் பின்புற சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததால், கள்ளிகாடு குடிசைப்பகுதியில் உள்ள 40க்கும் மேற்பட்ட வீடுகளில் மழைநீர் புகுந்து, பொருட்கள் அடித்து செல்லப்பட்டது.

**சில்லரை விலை பண வீக்கம் அதிகரிப்பு**



புதுடெல்லி: நாட்டின் சில்லரை விலை பண வீக்கம் கடந்த செப்டம்பரில் 4.41 சதவீதமாக அதிகரித்தது. இதற்கு உணவு பொருட்கள் விலை அதிகரிப்பு மற்றும் பருப்பு விலை உயர்வு முக்கிய காரணமாக உள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இந்த பண வீக்கம் 3.74 சதவீதமாக இருந்தது. உணவு மற்றும் பானங்கள் விலை இரட்டிப்பு ஆகி 4.29 சதவீதமாகவும், உணவு தானியங்கள் விலை 1.38 சதவீதமாகவும் அதிகரித்து விட்டது.

ஆனால், புரதம் நிறைந்த உணவுகளான இறைச்சி, மீன், பால் மற்றும் பால் பொருட்கள், முட்டை விலை சரிவடைந்தது என புள்ளி விவரம் மூலம் தெரியவந்துள்ளது. பண வீக்கம் ஊரக பகுதியில் 5.05 சதவீதமாகவும், நகர்ப்புற பகுதியில் 3.61 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.

## பூக்கள் விலை 2 மடங்கு உயர்வு

திருச்சி, : மகாளய அமாவாசை மற்றும் நாளை முதல் நவராத்திரி விழா துவங்கவிருப்பதை முன்னிட்டும் திருச்சியில் பூக்கள் விலை நேற்று முதல் இரு மடங்கு உயர்ந்துள்ளது. ˙ ரங்கம், காந்தி மார்க்கெட்டுக்கு வாத்தலை, வயலூர், குழுமணி, கோப்பு, மண்ணச்ச நல்லூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பூ இறக்குமதி ெசய்யப்படுகிறது. இதே போல் கன்னியாகுமரி, ராமேஸ்வரம், நாகர்கோயில் உள்ளிட்ட

பகுதிகளுக்கு இங்கிருந்து பூ ஏற்றுமதி செய்யப்படுகிறது. இன்று மகாளய அமாவாசையொட்டி பூ மார்க்கெட்டுகளில் பூ விலை 2 மடங்கு உயர்ந்துள்ளது. மழை பெய்வதால் கனகாம்பரம் பூ உற்பத்தி குறைந்ததால் ரூ.250க்கு விற்ற கிலோ கனகாம்பரம் ரூ.500க்கும், ரூ.150க்கு விற்ற மல்லி ரூ.200க்கும், ரூ.150க்கு விற்ற முல்லை ரூ.250க்கும், ரூ.150க்கு விற்ற ஜாதிப்பூ ரூ.500க்கும், ரூ.150க்கு விற்ற பெங்களூர் மல்லி ரூ.200க்கும், ரூ.30க்கு விற்ற சம்மங்கி ரூ.60க்கும், ரூ.60க்கு விற்ற சாமந்தி ரூ.120க்கும், ரூ.25க்கு விற்ற விருச்சிப்பூ ரூ.50க்கும், ரூ.80க்கு விற்ற அரளி ரூ.150க்கும் நேற்று காலையில் இருந்து விற்கப்பட்டு வருகிறது. இன்றும் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருக்கும் எனத் தொிகிறது.

இது குறித்து ° ரங்கம் மொத்த பூ வியாபாரி சத்தியமூர்த்தி கூறுகையில், மகாளய அமா வாசையொட்டி பூ விைல 2 மடங்கு உயர்ந்துள்ளது. நாளை முதல் நவராத்திரி விழா தொடங்க இருப்பதால் பூ விலை ஏறுமுகத்தில் தான் இருக்கும். அதன் பின்னர் குறைய வாய்ப்பு உள்ளது என்றார்.

## நெல்நாற்று நடவுக்கு இயந்திரம் பயன்படுத்தினால் உடனடி மானியம் வேளாண்துறை அறிவிப்பு

மானாமதுரை,: இயந்திரம் மூலம் நெல்நாற்று நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ. 3 ஆயிரம் மானியம் உடனடியாக வழங்கப்படுமென வேளாண்துறையினர் அறிவித்துள்ளனர்.சிவகங்கை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்யத்துவங்கியிருப்பதால் விளைநிலங்களில் நெல்நாற்றுகளை நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மானாமதுரை ஒன்றியத்திற்குட்பட்ட கால்பிரவு, தெற்குசந்தனூர் உள்ளிட்ட கிராமங்களில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்(அரிசி) 2015-16 ன் கீழ் இயந்திரம் மூலம் வரிசை நாற்று நடவுப்பணிகள் நடந்து வருகின்றன.இப்பணிகளை பார்வையிட்ட

வேளாண்துறை துணை இயக்குநர் அழகப்பன், உதவி இயக்குநர் மூர்த்தி கூறியதாவது: இயந்திரம் மூலம் வரிசை நடவு செய்தால் விதை அளவு குறையும். பயிர் எண்ணிக்கை சரியான விகிதத்தில் பராமரிக்கப்படும். போதுமான இடைவெளி கிடைப்பதால் களை எடுப்பதும், உரமிடுவதும் சுலபமாகும். இத்திட்டத்தின்கீழ் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். இப்பணம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். ஒவ்வொரு விவசாயியும் அதிகபட்சமாக 2 எக்டேருக்கு மானிய உதவி பெறலாம். இவ்வாறு அவர்கள் கூறினர். வேளாண்மை அலுவலர்கள் செல்லத்துரை, மலர்விழி, வேளாண்மை உதவி அலுவலர்கள் மகாலிங்கம், பாண்டியம்மாள் ஆகியோர் உடனிருந்தனர்.

**காங்கயத்தில் கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி**

காங்கயம்,: காங்கயம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்ததால் மழை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். காங்கயம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில தினங்களாக கடும் வெயில் மக்களை வாட்டி வந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு முழவதும் மழை பெய்தததது. இந்த மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தற்போதைய மழையை பயன்படுத்தி காய்கறி, ோசாளம் உள்ளிட்ட பயிர்களுக்கு உயிர் தண்ணீர் அளிக்க முடியும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மேலும் காங்கயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மேய்சல் நிலம் அதிகம் உள்ளன.மழை காரணமாக இந்த நிலங்களில் ஆடு,மாடுகளுக்கு தேவையான புற்கள் வளர்ந்து விடும் எவ விவசாயிகள் தெரிவித்துள்ளனர். மேலும் மழை தொடரும் பட்சத்தில் குளம் குட்டைகளில் நீர் தேங்கினால் கிணறுகளில் தண்ணீர் ஊற வசதியாக இருக்கும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

**திருப்பூர் மாவட்டத்தில் பலத்த மழை 276 மில்லி மீட்டர் மழை பதிவானது**

திருப்பூர், : திருப்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 276.5 மில்லி மீட்டர் மழை பதிவானது. அதிகபட்சமாக திருப்பூரில் 87 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. பருவமழை தொடங்கி உள்ளதால் கடந்த சில நாட்களாக திருப்பூர் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் காங்கயம், பொங்கலூர், வெள்ளகோவில், தாராபுரம், உடுமலை, மடத்துக்குளம் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். உழவு பணிகளை மேற்கொண்டு பயிரிடும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். நேற்று முன்தினம் நள்ளிரவு மாவட்டத்தின் பல இடங்களில் கனத்த மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள குளம், குட்டைகளில் மழைநீர் நிரம்பி வருகிறது. நிலத்தடி நீரும் உயர்ந்துள்ளதால் கிணற்றுப்பாசன விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். திருப்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு: அவிநாசியில் 35 மில்லி மீட்டர், பல்லடத்தில் 35 மில்லி மீட்டர், தாராபுரத்தில் 35.5 மில்லி மீட்டர், திருப்பூரில் 87 மில்லி மீட்டரும், காங்கயத்தில் 36 மில்லி மீட்டரும், உடுமலையில் 16 மில்லி மீட்டரும், மூலனூரில் 32 மில்லி மீட்டரும் என ஒரே நாளில் மாவட்டம் முழுவதும் 276.5 மில்லி மீட்டர் மழை பதிவானது. சராசரி மழை அளவு 39.5 ஆகும். பருவமழை தொடர்வதால் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை, வெள்ள பேரிடர் நடவடிக்கை பணிகளை துரித கதியில் செயல்படுத்த வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

**2 மாத காலதாமதத்திற்கு பிறகு திருமூர்த்தி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

உடுமலை, :பரம்பிக்குளம், ஆழியார் பாசனத்திட்டத்தின் (பி.ஏ.பி.,) கீழ் கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 3.70 லட்சம் ஏக்கர் பாசனம் பெறுகிறது. இவை 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 2 மண்டலங்கள் வீதம், ஒவ்வொரு மண்டலமும் ஒன்றரை ஆண்டிற்கு ஒரு முறை பாசனம் பெறுகிறது. இவற்றிற்கு திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி முதல் 4ம் மண்டலத்திற்கு பாசன காலம் துவங்கியது. ஆனால், 2 மாதம் கால தாமதமாக நேற்று (12ம் தேதி) தண்ணீர் திறந்து விடப்பட்டது. திருப்பூர் கலெக்டர் கோவிந்தராஜ் திறந்து விட்டார். மடத்துக்குளம் எம்.எல்.ஏ.சண்முகவேலு, பொள்ளாச்சி எம்.பி.,மகேந்திரன், ஆர்.டி.ஓ.,சாதனைகுறல், தாசில்தார் தயானந்தன், உடுமலை பி.ஏ.பி.,செயற்பொறியாளர் கிருஷ்ணன், உடுக்கம்பாளையம் ஊராட்சி தலைவர் பரமசிவம் முன்னிலை வகித்தனர். 4ம் மண்டலத்தில் உள்ள 94,068 ஏக்கருக்கு வினாடிக்கு 1,200 கன அடி வீதம் நேற்று முதல் தொடர்ந்து 17 நாட்கள் தண்ணீர் விடப்படுகிறது. பின்னர் தண்ணீர் நிறுத்தப்பட்டு அணையில் குறிப்பிட்ட சில நாட்கள் நீர் சேகரித்து போதுமான அளவில் தண்ணீர் இருப்புக்கு வந்தவுடன் மீண்டும் 17 நாட்கள் திறந்து விடப்படுகிறது. மொத்தம் 34 நாளில் 2 சுற்றுகளில் 3,746 மில்லியன் கனஅடி தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது.

இதன் மூலம் கோவை மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சி தாலுகாவில் உள்ள 19,502 ஏக்கரும், சூலூர் தாலுகாவிலுள்ள 3,656 ஏக்கரும், திருப்பூர் மாவட்டம் உடுமலை தாலுகாவிலுள்ள 16,146 ஏக்கரும், மடத்துக்குளம் தாலுகாவில் 4,626 ஏக்கரும், தாராபுரம் தாலுகாவில் 19,136 ஏக்கரும், பல்லடம் தாலுகாவில் 5,966 ஏக்கரும், திருப்பூர் தாலுகாவில் 8,611 ஏக்கரும், காங்கயம் தாலுகாவில் 16,425 ஏக்கரும் பயன்பெறும்.பி.ஏ.பி.,4ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறந்த அதே

நேரத்தில், அணையில் இருந்து தளி வாய்க்கால் பாசனத்திற்கும் தனியாக தண்ணீர் திறக்கப்பட்டது. இது வரும் மே மாதம் வரை மொத்தம் 650 மில்லியன் கன அடி நீர், அங்குள்ள தினைக்குளம், செட்டிக்குளம், செங்குளம், கரிசல் குளம், அம்மாபட்டிக்குளம், பெரிய குளம், ஒட்டுக்குளம், வளையாபாளையம் குளம் ஆகியவற்றிற்கு 5 முறை நிரப்பும் வகையில் திறந்து விடப்படுகிறது. தளி பாசன திட்டத்தில் 8 குளங்கள் மற்றும் நேரடி பாசனம் மூலம் மொத்தம் 2,786 ஏக்கர் பாசனம் பெறும். திருமூர்த்தி அணை நீர் மட்டம் : திருமூர்த்தி அணைக்கு வினாடிக்கு 963 கன அடி நீர் வருகிறது. நீர் மட்டம் ெமாத்தமுள்ள 60 அடியில் 49.55 அடி நீர் உள்ளது. நீர் கொள்ளளவு 1,502.77 மில்லியன் கன அடி நீராகும்.

**இயற்கை வேளாண் பயிற்சி முகாம்**

வேதாரண்யம், : நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த பெரியகுத்தகையில் சுருமான்பட்டி நம்மாழ்வார் உயிர்சூழல் நடுவமான வானகம், வானவில் வாழ்வியல் நடுவம் இணைந்து நடத்திய மூன்று நாள் இயற்கை வழி வேளாண் பயிற்சி முகாம் நடைபெற்றது. வானகம் கல்வி நடுவம் குழுவினர் பயிற்சி அளித்தனர். ஏன் வேண்டும் இயற்கை விவசாயம் என்ற தலைப்பில் சத்யமங்கலம் குமார், தேனீ வளர்ப்பு குறித்து மதுரை ஜோஜின், மருந்தில்லா மருத்துவம் குறித்து சென்னை தமிழ்வேலன் ஆகியோர் பேசினர். பண்ணை கள ஆய்வின்போது குமரவேல், ரமேஷ், ஏங்கல்ஸ் ராஜா உள்ளிட்டோர் பயிற்சி மற்றும் விளக்கமளித்தனர். பஞ்சகவ்யம் போன்ற இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரிப்பு, பாத்திகள் அமைப்பு முறை போன்ற செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தென் தமிழகத்தில் காற்று மேல் அடுக்கு சுழற்சி: கன மழைக்கு வாய்ப்பு

தென் தமிழகத்தில் காற்று மேல் அடுக்கு சுழற்சி நிலவுவதால் அடுத்த 48 மணி நேரத்துக்கு கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளது. பெரம்பலூர் மாவட்டம் வெண் பாவூர், தஞ்சாவூரில் 14 செ.மீ., திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம், மதுரை மாவட்டம் சோழ வந்தானில் 13 செ.மீ., திருச்சி மாவட்டம் துறையூரில் 12 செ.மீ., நாமக்கல் மாவட்டம் மங்களாபுரத்தில் 11 செ.மீ., சேலம் மாவட்டம் ஏற்காடு, புதுக்கோட்டை மாவட்டம் விரலிமலையில் 10 செ.மீ., ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப் பாளையம், சேலம் மாவட்டம் வாழப்பாடி, திருப்பூர் ஆகிய இடங்களில் 9 செ.மீ. மழை நேற்று முன் தினம் பதிவாகியுள்ளது.

**அதிக மழை**

மதுரையில் கடந்த 10 ஆண்டுகளில் அக்டோபர் மாதத்தில் அதிகபட்சமாக 8.8 செ.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. ஆனால், இந்த ஆண்டு 13 செ.மீ. வரை பெய்துள்ளது. இதே போன்று பிற மாவட்டங்களிலும் வழக்கத்தை விட அதிகமான மழை பெய்துள்ளது.

கிழக்கு மத்திய அரபிக் கடலில் உருவாகியிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை தற்போது வலுவிழந்து வடமேற்கு திசையில் நகர்ந்துள்ளது. எனினும் காற்றும் மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களிலும் உள் மாவட்டங்களிலும் பல இடங்களில் கன மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.____

## அன்று சிலிக்கன் வேலியில் வல்லுநர்... இன்று திருப்பூரில் தீவிர விவசாயி!



***தனது பொறியியல் அறிவைப் பயன்படுத்தி இயற்கை விவசாயத்தில் சாதனை படைத்திருக்கிறார் ஜோசப் என்னும் விவசாயி.***

64 வயதான ஜோசப் அடிப்படையில் ஒரு கணிப்பொறி பொறியாளர். அமெரிக்காவின் தொழில்நுட்ப நகரான சிலிக்கன் வேலியில் பணிபுரிந்த அவர், ஒரு விவசாயி என்றே அறியப்பட விரும்புகிறார்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள சந்தூகல் என்னும் இடத்தில் 75 ஏக்கர் அளவில் நிலத்தை வைத்திருக்கும் ஜோசப், அங்கே 13 வகையான இயற்கையான பயிர்களை பயிரிட்டு வருகிறார். இவை அனைத்தும், அண்டையில் உள்ள மற்ற தோட்டத்து விவசாயிகளால் பெரிய அளவில் வளர்க்கப்படாத வகைகள். அவையனைத்தும் மற்ற விவசாயிகளால் வணிக ரீதியாக பெரியளவில் விளைச்சலைத் தராத வகைகளாகவே பார்க்கப்படுகிறது.

ஜோசப் தனது விளைநிலத்தில் பாசனத்திற்கு புதிய முறைகளை பயன்படுத்துகிறார். பொழியும் மழை நீர் முழுமையாக சேகரிக்கப்பட்டு, 60 அடி ஆழ தண்ணீர்த் தொட்டி மற்றும் ஒன்பது சிறிய தொட்டிகளிலும் சேமிக்கப்படுகிறது.

அவர் தன்னுடைய கணிப்பொறி அறிவைக் கொண்டு, பம்ப் மூலம் நீரை எடுத்து முறையான கால இடைவெளிகளில் தண்ணீர் பாய்ச்சுகிறார். அவரின் வெற்றிகரமான விவசாயத்தில் பலாப்பழம், முந்திரி, கோகோ, அவரை, மிளகு, நெல்லிக்காய், தேங்காய் மற்றும் எலுமிச்சை ஆகியவை அடக்கம்.

இது குறித்து ஜோசப் கூறும்போது, "விளைநிலம் மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்திருப்பதால், கணிசமான மழைப்பொழிவு இருக்கிறது. பெய்யும் மேற்பரப்பு நீர், சிறிய தொட்டிகளுக்கும் அங்கிருந்து மண்ணுக்கு அடியில் புதைக்கப்பட்டிருக்கும் குழாய்கள் மூலம், பெரிய தொட்டிக்கும் சென்றுவிடும்.

இயற்கைப் பயிர்களை விளைவிப்பதில் அக்கறையோடு, அறிவியலையும் சேர்ப்பதால், விளைச்சலுக்கு ஏற்ற நல்ல சந்தை விலையைப் பெற முடிகிறது. தொன்மை வாய்ந்த பயிர்கள் பருவத்தைத் தாண்டியும் விளைவதால், ஆண்டு முழுக்க வருமானம் பார்க்கிறேன்" என்று பெருமிதமாக கூறினார்.

நிலங்களை மீட்டெடுக்கும் நுண்ணுயிரிகள்: சென்னை மாணவியின் புது ஆராய்ச்சி_




தெரிந்தோ, தெரியாமலோ இரண்டு தலைமுறை விவசாயிகள் பசுமைப் புரட்சி பரிந்துரைத்த ரசாயனங்கள், வீரிய விதைகள் போன்றவற்றைத் தங்களின் நிலத்தில் பயன்படுத்தி இருக்கிறார்கள். அவற்றின் பாதகமான விளைவுகளை மனப்பூர்வமாக உணர்ந்தவுடன், இயற்கை விவசாயத்துக்கு மாறுவதற்குத் தயாராக இருப்பவர்களின் எண்ணிக்கை நாடு முழுவதும் நாளுக்கு நாள் உயர்ந்துவருகிறது.

"இப்படி விவசாயிகள் மாற நினைத்தாலும், உடனடியாக மாற முடியாது. ஏனென்றால், மண்ணில் பயன்படுத்தப்பட்ட ரசாயனப் பொருட்களின் தன்மையை அவ்வளவு சீக்கிரமாக மண்ணிலிருந்து வெளியேற்றிவிடமுடியாது" என்கிறார் பேராசிரியர் சுல்தான் இஸ்மாயில். நம் விவசாய நிலங்களுக்கு வீரிய விதைகள் வந்த முன்கதையையும் விவரிக்கிறார்.

**வீரிய விதைகளின் தொடக்கம்**

"1960-களில் இந்தியாவில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. பட்டினிச் சாவுகளைத் தடுக்க அன்றைக்கு விவசாயத் துறை அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் இடம்பெற்ற ஒருவர்தான் டாக்டர்

எம்.எஸ். சுவாமிநாதன். இந்தக் குழுவின் அறிவுறுத்தலின்படி அமெரிக்காவிலிருந்து கோதுமை ரகங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அத்துடன் பன்னாட்டு வீரிய விதைகளும் வந்தன. இத்துடன் வெளிநாட்டு களையான பார்த்தீனியமும் நம்முடைய நிலத்தில் ஆங்காங்கே விழுந்தது. பசுமைப் புரட்சி முழு வீச்சில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒரு கட்டத்தில் பசுமைப் புரட்சியால் உணவுப் பற்றாக்குறையைச் சமாளித்த பின்பும் அதிக மகசூல் பெறும் ஆசையில் விவசாயிகள் வேதிப்பொருட்களை கூடுதலாகச் சார்ந்திருக்க ஆரம்பித்தார்கள். விளைவு? வீரிய விதைகளும், ரசாயனங்களும் விவசாய நிலங்களில் பரவலாக்கப்பட்டன. வீரிய விதைகளின் பயன்பாட்டால் நம் மண்ணுக்கே இயல்பான பல்லுயிர்ப் பெருக்கம் பாதிக்கப்பட்டது. இப்படித்தான் நம் மண்ணில் வீரிய விதைகளும், ரசாயனங்களும் வேரூன்றின.

நீண்டகாலத்துக்கு ரசாயனத்தைப் பயன்படுத்திய விவசாய நிலத்தின் மண், உடனடியாக இயற்கை விவசாயத்துக்கு மாறாது. பூச்சிக்கொல்லி எச்சங்கள் பல ஆண்டுகளுக்கு அந்த நிலத்தில் தங்கியிருக்கும். பூச்சிக்கொல்லி பயன்படுத்திய நிலத்தில் விளையும் பொருட்களைக் குறைந்தபட்சம் மூன்றாண்டுகள்வரை, இயற்கை முறை விவசாயத்தில் விளைந்த பொருட்கள் என உறுதி தர முடியாது என்கிறது இயற்கை விவசாயத்தை முன்னெடுக்கும் பன்னாட்டு அமைப்பு (IFOAM)" என்கிறார் முனைவர் சுல்தான் இஸ்மாயில்.

**மூன்றாண்டு முட்டுக்கட்டையைத் தகர்க்க**

ரசாயனம், பூச்சிக்கொல்லி போன்றவற்றைத் தவிர்த்துவிட்டு, இயற்கை முறை விவசாயத்துக்குத் திரும்ப நினைக்கும் ஒரு விவசாயி, மேற்கண்ட முட்டுக்கட்டையை மூன்று ஆண்டுகளுக்குத் தாக்குப்பிடிப்பது எப்படி?

இதற்குப் பதிலாய் Eco-remediation of Pesticide Influenced Soil என்னும் தலைப்பில் தன்னுடைய முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டிருக்கிறார், சென்னை புதுக் கல்லூரி மாணவி ராமலக்ஷ்மி.

எளிய குடும்பப் பின்னணியைக் கொண்ட இவருடைய தந்தை மந்திரமூர்த்தி, உணவுவிடுதி நடத்திவருகிறார்.


புற்றுநோய்க்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவராக வேண்டும் என்பதுதான் ராமலக்ஷ்மியின் விருப்பமாக இருந்திருக்கிறது. ஆனால் அதற்கு இடம் கிடைக்காமல் கலங்கி நின்றார். அப்போது புற்றுநோய்க்கு எதிராக இப்படியும் பங்களிக்கலாம் என இந்த ஆராய்ச்சிக்கான தொடக்கப் புள்ளியாக இருந்தவர், புதுக் கல்லூரியிலிருந்து தற்போது ஓய்வுபெற்றுவிட்ட பேராசிரியர் சுல்தான் இஸ்மாயில். அத்துடன் நின்றுவிடாமல் விலங்கியல் துறை இணைப் பேராசிரியர் அப்துஸ் சபூரின் வழிகாட்டுதலுடன், ராமலக்ஷ்மியின் ஆய்வைத் தொடர்வதற்கும் உதவியிருக்கிறார்.

**ஒரு பிடி மண்**

"நீண்டகாலம் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்ட நிலம், இயற்கை விவசாயத்தை ஏற்று மகசூல் தரும் வகையில் உயிரியல் தொழில்நுட்பம் மூலம் மீட்டெடுக்க முடியும். அந்த நிலத்தின் தன்மை தொடர்பாக அறிய அறிவியல்ரீதியான பல பரிசோதனைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் ஆய்வகத்தின் உதவியோடுதான் சாதாரணமாகச் செய்ய முடியும். இந்த நடைமுறைகளை ஒரு சாமானிய விவசாயியால் செய்ய முடியாது. இந்த இடத்தில்தான் ராமலக்ஷ்மியின் ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த ஆய்வின்படி விவசாய நிலத்துக்கு ஆய்வகம் வரவேண்டியதில்லை, நிலத்தின் மண் அடுக்கும் (Soil Bed) ஆய்வகத்துக்குச் செல்ல வேண்டியதில்லை. அன்றாடம் நம் வீட்டுச் சமையலறையில் பயன்படுத்தப்படும் சில கார்பன் மற்றும் நைட்ரஜன் சார்ந்த பொருட்களோடு, ரசாயனங்கள் பயன்படுத்தப்பட்ட நிலத்தின் ஒருபிடி மண்ணைச் சேர்த்துப் பார்த்தோம். ரூ. 100 முதல் ரூ. 500 வரை மதிப்புள்ள சமையலறை பொருட்களிலிருந்து பெருகும் நுண்ணுயிரிகள் பாதிக்கப்பட்ட அந்த நிலத்தை வெகு சீக்கிரமாக இயற்கை

விவசாயத்துக்கு ஏற்ற நிலமாக மாற்றிவிடும் என்கிறார் முனைவர் அப்துஸ் சபூர்.





▲ சுல்தான் இஸ்மாயில் ▲ அப்துஸ் சபூர்

**நுண்ணுயிரிகளின் பலம்**

"விவசாய நிலத்தில் பலவகையான ரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் பரவலாகப் பயன்படுத்தப்படும் ரசாயனப் பூச்சிக்கொல்லி மீத்தைல் பாரத்தியான். இந்த ரசாயனத்தால் சரும நோய், சிறுநீரகக் கோளாறுகள், புற்றுநோய் போன்ற பல்வேறு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த ரசாயனம் பயன்படுத்தப்பட்ட மண்ணில் இருக்கும் நுண்ணுயிரிகளைக் கல்லூரி ஆய்வகத்தில் பரிசோதித்துப் பார்த்ததில், குறிப்பிட்ட அந்த ரசாயனத்தை எதிர்க்கும் திறன் நுண்ணுயிரிகளுக்கு உண்டாகியிருந்ததைப் பார்த்தோம். ஆகவே, சில சமையலறைப் பொருட்களோடு ரசாயனம் பயன்படுத்தப்பட்ட நிலத்தின் மண்ணையும் சேர்த்துவைப்பதன் மூலம் அதில் உருவாகும் நுண்ணுயிர்களுக்கு ரசாயனத்தின் வீரியத்தை அழிக்கும் திறன் அதிகரிப்பதை உணர்ந்தோம்.

இந்தக் கலவையையும் நம் நாட்டு மண்புழுக்களையும் சேர்த்தால் பலன்கள் விரைவாகக் கிடைக்கும். ரசாயனத்தால் பாதிக்கப்பட்ட விவசாய நிலத்தை இயற்கை வேளாண்மைக்கு ஏற்ற நிலமாக, குறுகிய காலத்தில் மாற்றும் புதிய தொழில்நுட்பம் குறித்து ஆய்வு நடத்திவருகிறோம். இதுதான் என்னுடைய ஆராய்ச்சிக்கு அடிப்படை. என்னுடைய முனைவர் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்ததும், இந்த ஆய்வின் முடிவை நம் நாட்டு விவசாயிகளுக்கு அர்ப்பணிக்கப்போகிறேன்" என்றார் ராமலக்ஷ்மி நெகிழ்ச்சியோடு.